Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 333 | சனிக்கிழமை | ஐப்பசி 13 ஆம் நாள் 30 ஒக்ரோபர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## தமிழர்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யவேண்டும் புதிய அரசமைப்பு!

### இலங்கை அரசிடம் எடுத்துரைத்ததாக சம்பந்தனிடம் இந்தியத் தூதுவர் உறுதி



கொழும்பு, ஒக்ரோபர் 30

"ஐக்கிய இலங்கைக்குள் சமத்துவம், சமாதானம், நீதி மற்றும் கௌரவம் ஆகியவற்றுக்கான தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும்வகையில் இலங்கையின் புதிய அரசமைப்பு அமைய வேண்டும். இதை இலங்கை ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரச தரப்பிடம் இந்திய மத்திய அரசின் சார்பில் நாம் எடுத்துரைத்துள்ளோம்."

15

## தொற்று 556 சாவு 10

கொழும்பு, ஒக். 30

இலங்கையில் நேற்று 556 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

15

## தென்மராட்சியில் கொரோனாவால் இருவர் சாவு

சாவகச்சேரி, ஒக். 30

தென்மராட்சி பிரதேசத்தில் மேலும் இருவர் கொரோனாத் தொற்றால் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர்.

15

## யாழ். மாவட்டத்தில் 63 பேருக்குத் தொற்று

*மாவட்ட செயலர் தகவல்*

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனாத்தொற்று சற்று குறைவடைந்துள்ளது. எனினும், நேற்று (நேற்றுமுன்தி

15

## மாகாணத் தடை நாளை நீக்கம்

கொழும்பு, ஒக். 30

நாட்டில் நடைமுறையில் காணப்படும் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பா

15

## தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்கலாமா?

*ஆராய்கின்றது அரசு*

கொழும்பு, ஒக். 30

பொது இடங்கள், வர்த்தக நிலையங்கள், சிற்றுண்டிச் சாலைகள் உள்ளிட்ட பொதுமக்

15

## கொரோனா ஆபத்து குறையவேயில்லை!

*விசேட மருத்துவ நிபுணர் சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஒக். 30

"நாடு முழுவதிலும் நடைமுறையில் இருந்த சகல பயணத்தடைகளும் நீக்கப்பட்டாலும்

15

## சிங்கள மயமாக்கலுக்கு எதிராக அடுத்த வாரமும் போராட்டம்

வவுனியா, ஒக். 30

வவுனியா வடக்கில் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றத்தைக் கண்டித்து தமிழ்க் கட்சிகள் சில ஒன்றிணைந்து மாபெரும் போராட்டத்தை அடுத்த வாரம் நடத்தவுள்ளோம் என்று வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியா வடக்கில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றத்தைக் கண்டிக்கும் வகையில், வவுனியா நகர சபை மண்டபத்தில் தமிழ் அரசுக்கட்சியின் ஏற்பாட்டில்

11

## வவுனியாவில் சிங்கள மயமாக்கலுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



வவுனியா, ஒக். 30

அநுராதபுரம் மாவட்டத்தின் வடக்கு பகுதியைச்சேர்ந்த சிங்கள மக்கள் வாழும் கிராமங்கள் சிலவற்றை வவுனியா வடக்கு பிரதேச செயலகப்பிரிவுடன் எல்லை நிர்ணயத்தின் ஊடாக இணைக்க மேற்கொள்ளப்படும் செயற்பாட்டை கண்டித்து, வவுனியா

15

## இராணுவ வாகனத்தில் மோதுண்ட இளைஞர் சாவு

முல்லைத்தீவு, ஒக் 30

புதுக்குடியிருப்பு நகர்பகுதியில் வீதியில் தரித்து நின்ற இராணுவத்தினரின் வாகனத்துடன் மோதி இளைஞன் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

15

## கறுப்புப் பட்டியலில் மக்கள் வங்கியை சேர்த்தது சீனா

கொழும்பு, ஒக். 30

இலங்கை மக்கள் வங்கி சீனாவின் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. இலங்கைக்கான சீனத்தூதரகம் இந்த விடயத்தை உறுதிப்படுத்தி அறிக்கை வெளியிட்டுள்ளது.

கடன் பெறுவதற்கான உத்தரவாதக்கடிதம் மற்றும் இரு தரப்பினருக்கு இடையிலான ஒப்பந்தங்களின்படி பணம் செலுத்தத் தவறியதற்காக, இலங்கையில் உள்ள சீனத்தூதரகத்தின் பொருளாதார மற்றும் வணிக

15

## ஜனாதிபதி செயலணிக்கு தமிழ்ப் பிரதிநிதித்துவம்!

*எதிர்ப்புகள் வலுத்த நிலையில் உடனடி நடவடிக்கைக்கு ஏற்பாடு*

விரிவு பக்கம் 07

## சண்டிலிப்பாயில் மழையால் 40 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாண மாவட்டத்தில் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக கடந்த 24 மணித்தியாலங்களில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 09 குடும்பங்களைச் சேர்ந்த 40 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒரு குடும்


15

# யுகதனவி பங்குகள் விற்பனை வடக்கில் எதிர்ப்புப் போராட்டம்

**யாழ்ப்பாணம், ஒக்.30**

**யுகதனவி மின் நிலையத்தின் 40 சதவீதப் பங்குகளை அரசு, அமெரிக்காவுக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு மாகாண மின்சார சபையில் நேற்று கையெழுத்துப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**



யாழ்ப்பாணத்தில் உள்ள வட மாகாண பிராந்திய காரியாலயத்தில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தில் மின்சார சபையின் வடக்கு மாகாண தொழிற்சங்க இணைப்பாளர் குமரன், இலங்கை மின்சார சபை தொழிற்சங்கத்தின் உபதலைவர் ஜெயந்த குணரத்ன மற்றும் மின்சார சபைப் பணியாளர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த இலங்கை மின்சார சபை தொழிற்சங்கத்தின் உபதலைவர் ஜெயந்த குணரத்ன யுகதனவி மின் நிலையப் பங்குகளை அமெரிக்காவுக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

வடக்கு மாகாண இலங்கை மின்சார சபையின் ஐக்கிய தொழிற்சங்கக் கூட்டணியால் கையெழுத்து மற்றும் அடையாளப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. பங்குகளை விற்பனை செய்வதை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்.

அரசு இதற்கு செவிமடுக்காது இருந்தால், எதிர்வரும் 3ஆம் திகதி இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலகத்தில் பெரும் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படும். -என்றார். (ஏ-125)

## இம்முறை யாழ். விருது வாழ்வகத் தலைவருக்கு

யாழ்ப்பாணம்,ஒக்.30

இந்தமுறை யாழ்.விருது சுன்னாகத்தில் அமைந்துள்ள வாழ்வக நிறுவனத்தின் தலைவரும், கோப்பாய் தேசிய கல்வியற்கல்லூரி விரிவுரையாளருமாகிய ஆ.ரவீந்திரனுக்கு வழங்கப்படவுள்ளது.

யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினரால் நல்லூர் உற்சவ காலத்தில் முன்னெடுக்கப்படும் நல்லைக்குமரன் மலர் வெளியீடும், யாழ். விருது வழங்கலும் நிகழ்வுகள் ஏற்கனவே திட்டமிடப்பட்டபடி தற்போதைய சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நடைபெறும் என்று யாழ்.மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஒ-4)

## காணாமற்போன பொலிஸ் சார்ஜன்ட் சடலமாக மீட்பு

கொழும்பு. ஒக். 30

கம்பளை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் காணாமற்போயிருந்த பொலிஸ் சார்ஜன்ட், அந்த மருத்துவமனையின் நீர்த்தாங்கியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொத்மலை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் சார்ஜன்டாக கடமையாற்றிய எஸ். இளங்கோவன் (வயது - 55) என்பவரே கடந்த செப்ரெம்பர் மாதம் 08 ஆம் திகதி காணாமல் போயிருந்தநிலையில், நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார்.

நீர்த் தாங்கியிலிருந்து வரும் தண்ணீரில் துர்நாற்றம் வீசுவதாகக் கூறப்பட்டதையடுத்து, தாங்கியைச் சுத்தம் செய்ய முற்பட்டபோது அதற்குள் சடலம் இருக்கின்றமை தெரியவந்தது.

அதனையடுத்து பொலிஸார் சடலத்தை நேற்று மீட்டனர்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கண்டி போதனா மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டது. சம்பவம் தொடர்பில் கம்பளை தலைமையகப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (த-இ)

## பல்கலை வெட்டுப்புள்ளி வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக்.30

2020 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையின், பல்கலைக்கழக அனுமதிக்கான இசட் வெட்டுப்புள்ளிகள் நேற்று மாலை வெளியிடப்பட்டுள்ளன.

ஆணைக்குழுவின் https://www.ugc.ac.lk/ என்ற இணையத்தளத்தில் வெட்டுப்புள்ளிகளைப் பார்வையிட முடியும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார். (ஒ-4)

வந்தாறுமூலை நீர்முகப் பிள்ளையார் கோவிலில்

## தொல்பொருள் திணைக்களத்தினர் எதிர்ப்பால் திரும்பிச் சென்றனர்!

மட்டக்களப்பு. ஒக். 30

மட்டக்களப்பு - வந்தாறுமூலை நீர்முகப் பிள்ளையார் கோவிலுக்குச் சொந்தமான காணியில் தொல்பொருள் திணைக்களத்தினர், முன்னெடுக்கவிருந்த அடையாளப்படுத்தும் நடவடிக்கையை, கோவில் நிர்வாகத்தின் எதிர்ப்பையடுத்து கைவிட்டு திரும்பிச் சென்றனர்.

கோவிலுக்குச் சொந்தமான 16 ஏக்கர் வயற்காணி பேரம் பகுதியில் அமைந்துள்ளதாக கோவில் நிர்வாகம் கூறுகின்றது.

அந்தப் பகுதியில் தொல்பொருள் சின்னங்கள் உள்ளன என்று தெரிவித்து, மட்டக்களப்பு தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர்கள் நேற்று அங்கு அடையாளப்படுத்தும் நடவடிக்கைக்குச் சென்றனர். அதற்கு கோவில் நிர்வாகத்தினரும் விவசாயிகளும் இணைந்து எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனையடுத்து, தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

வந்தாறுமூலை ஸ்ரீ மகாவிஷ்ணு கோவில், வந்தாறுமூலை கண்ணகி அம்மன் கோவில், வந்தாறுமூலை நீர்முகப் பிள்ளையார் கோவில் ஆகியவற்றின் நிர்வாகத்தின் கீழ் 16 ஏக்கர் வயல் காணி வருடாந்தம் விவசாயிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டு வருகின்றது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)

முல்லை. மாவட்ட மருத்துவமனையில்

## தீவிர சிகிச்சைப் பிரிவு திறந்து வைக்கப்பட்டது

முல்லைத்தீவு. ஒக்.30

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

சுமார் 40 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட தீவிர சிகிச்சை பிரிவே திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பல்வேறுபட்ட அமைப்புகள் மற்றும் தனவந்தர்கள் இணைந்து இதற்கான நிதியை வழங்கியுள்ளனர்.

இதன்மூலம் பல்வேறுபட்ட உபகரணங்களும் தளபாடங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இந்த அலகை பேராசிரியர் பி.டி.ஆர். மகுலொழுவா திறந்து வைத்துள்ளார்.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர், துறைசார் மருத்துவ அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள் மருத்துவமனை நலன்புரிச் சங்கத்தினர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (த-இ)

## பெரும்போக நெற்செய்கை ஆரம்பம்; கால்நடைகளைக் கட்டி வளர்க்கவும்

### விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி,ஒக்.30

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை, முரசுமோட்டை, பெரியகுளம் மற்றும் கல்மடு போன்ற பகுதிகளில் அதிகரித்துள்ள கட்டாக்காலிக் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது அனைத்துப் பகுதிகளிலும் பெரும்போக பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதம் கடந்துள்ளது. இவ்வாறு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட இடங்களில் கட்டாக்காலி கால்நடைகள் தினமும் காலை ,மாலை என பயிர்களை நாசம் செய்து வருகின்றன. தற்போது உரம் மற்றும் கிருமிநாசினி பிரச்சினைகளை எதிர்கொண்டு வரும் நிலையில் கால்நடைகளும் புதுப்பிரச்சினையாக உள்ளன. பயிர்ச்செய்கைக் கூட்டங்களில் கால்நடை கட்டுப்பாடுகள் தொடர்பாக அறிவிக்கப்பட்ட போதும் அவை வெறும் பேச்சளவிலேயே உள்ளன.



எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய கமக்கார அமைப்புக்கள் ஊடாக கால்நடைகளை கட்டுப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றனர். (ஐ-113)

# தமிழ்க் கட்சிகளின் சந்திப்பில் பங்கேற்காது தமிழரசுக் கட்சி!

**யாழ்ப்பாணம், ஒக்.30**

**தமிழ்க் கட்சிகளை ஓரணியில் இணைக்கும் நோக்குடன் எதிர்வரும் 2ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கிடையிலான கலந்துரையாடலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பங்கேற்காது என்று தெரிவிக்கப்படுகின்றது.**

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியாக கோரிக்கை விடுப்பதற்கான முதற்கட்ட முயற்சியாக எதிர்வரும் 2ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ் முற்போக்குக் கூட்டணி என்பன கலந்துகொள்ளவுள்ளன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி, தனது அரசியல் குழுக் கூட்டத்தை இணைய வழியாக நடத்தியது. அதில் எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ள சந்திப்பில் கலந்துகொள்வதில்லை என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இந்தச் சந்திப்புக்களில் பங்குபற்றுவதா? இல்லையா? என்பது தொடர்பில் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தைக் கூட்டி முடிவெடுப்பது என்றும், எதிர்வரும் 6ஆம் திகதி கட்சியின் மத்தியகுழுவை, வவுனியாவில் கூட்டுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக தமிழர் தரப்பில் போதுமான அழுத்தம் கொடுக்கப்படுவதில்லை என்று சுட்டிக்காட்டியிருந்தார்.

அதன்பின்னரே தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றிணைத்து, அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அழுத்தம் கொடுக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. அது தொடர்பான சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் நிலையில் தற்போது இலங்கைத் தமிழரசுக் கட்சி அந்தச் சந்திப்பைப் புறக்கணிப்பது என்று தீர்மானித்துள்ளது. (எ-இ)

## மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கிளிநொச்சிக்கு நீர் வழங்கல்



கிளிநொச்சி, ஒக்.30

கிளிநொச்சிக்கான நீர் வழங்கல் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மேற்கொள்ளப்படும் என்று கிளிநொச்சி மாவட்ட நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி - முல்லைத்தீவு பொறியியலாளர் எந்திரி எஸ்.சாரங்கன் தெரிவித்துள்ளார்.

தற்போது பெய்துவரும் மழையால் கிளிநொச்சிக் குளத்துக்கு அதன் நீரேந்துப் பகுதிகளில் இருந்து கலங்கிய நீர் வருவதாலேயே மட்டுப்படுத்தப்பட்ட நீர் வழங்கலை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கிளிநொச்சி மாவட்டத்துக்கு கிளிநொச்சிக் குளத்தில் இருந்து நீர் பெறப்பட்டு சுத்திரிகரிக்கப் பட்டே வழங்கப்படுகின்றது. தற்போது கலங்கிய நீர் வருவதால் பிரதான நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் நீரைச் சுத்திகரிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. அதனால் நீர் விநியோகத்தை மட்டுப்படுத்த வேண்டியுள்ளது. நாளாந்த தண்ணீர்த் தேவையின் மூன்றில் ஒரு பகுதியையே தற்போது வழங்கக் கூடியதாக இருக்கின்றது. அதனால் மக்கள் நீரைச் சிக்கனமாக உபயோகிப்பதுடன், கொதித்தாறிய நீரையே குடி தண்ணீருக்குப் பயன்படுத்த வேண்டும் - என்றார். (எ-214)

## அதிக மழைவீழ்ச்சி நயினாதீவில் பதிவு

யாழ்ப்பாணம், ஒக்.30

கடந்த 24 மணி நேரத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நயினாதீவில் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 24 மணி நேரத்தில் யாழ்ப்பாணத்தில் 20.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. அதிகூடிய மழைவீழ்ச்சியாக நயினாதீவுப் பகுதியில் 80.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி கிடைக்கப் பெற்றுள்ளது. எனினும் மழை காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் இதுவரை முழுமையான விவரங்கள் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவுக்கு கிடைக்கவில்லை - என்றார். (ஐ)

## மெட்டா என பெயரை மாற்றியது பேஸ்புக்கின் தாய் நிறுவனம்

பிரபல சமூக வலைத்தளங்களான பேஸ்புக், வட்ஸ் அப், இன்ஸ்டாகிராம் ஆகியவற்றின் தாய் நிறுவனத்தின் பெயர் "மெட்டா" என மாற்றப்பட்டுள்ளது என்று அதன் தலைமைச் செயல் அதிகாரி மார்க் சூக்கர்பெர்க் அறிவித்துள்ளார்.

இந்தப் பெயர் மாற்றம் தொடர்பாக சில வாரங்களுக்கு முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் நடந்த மாநாடு ஒன்றில் மார்க் சூக்கர்பெர்க் புதிய பெயரை அறிவித்துள்ளார்.

இந்தப் பெயர் மாற்றம், அந்த நிறுவனத்தில் ஏற்கனவே செயற்பாட்டில் உள்ள செயலிகளுக்குப் பொருந்தாது. அவை முன்னர் இயங்கிய பெயர்களிலேயே இயங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தனது நிறுவனம் அடுத்த கட்டமாக மெய் நிகர் இணைய உலகமான "மெட்டாவேர்ள்ஸ்" நோக்கிக் கவனத்தைத் திருப்பியுள்ளது என்று தெரிவித்துள்ள மார்க் சூக்கர்பெர்க், நிறுவனத்தின் புதிய பெயர் அதைப் பிரதிபலிக்கின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

சமூகப் பிரச்சினைகளுடன் போராடி நிறையக் கற்றுக் கொண்டுள்ளோம். கற்றுக் கொண்ட அனைத்தையும் கொண்டு புதிய அத்தியாயத்தை உருவாக்க வேண்டிய நேரம் இது என்றும் மார்க் சூக்கர்பெர்க் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)




கடும் மாரி தொடங்கிட்டு. வெளியில திரியிறதே கனபேருக்கு இப்ப சினமாக் கிடக்கும். போதாக் குறைக்கு சில றோட்டுகள் கிடக்கிற நிலைமையைப் பார்த்தா பயணம் போற நினைப்பே வராது. அதிலயும் ஏ- 32 றோட்டைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். தனங்கிளப்பில இருந்து பூநகரி வரை இந்த றோட்டில கன இடங்கள் பொருமிப் போய், பொக்களம் வந்து வெடிச்ச மாதிரி ஆவெண்டு கிடக்குது. ஏ-9 றோட்டுப் போட்ட பிறகுதான் கிட்டடியில உந்த ஏ-32 றோட்டும் அதோட சேர்த்து பரந்தனில இருந்து பூநகரி வாற றோட்டும் போட்டவை. ஆனா ஏ-9 றோட்டில இப்பவும் கண்ணைமூடிக்கொண்டு போய்வரலாம். இடைக்கிடை (எழுதுமட்டுவாள், ஆனையிறவுப் பக்கமா) ஒண்டிரண்டு பள்ளம் இருந்தாலும், அந்த றோட்டில போய்வாறதில பெரும் பிரச்சினை ஏதுமில்லை.

ஆனால் ஏ-32 றோட்டில தனங்கிளப்பில இருந்து பூநகரி போறதும், அங்கால பூநகரியில இருந்து பரந்தன் போறதும் சீவன் போற பயணமா மாறிட்டுது.

எல்லாத்துக்கும் காரணம் உந்த டிப்பருகள் தான். பரந்தனால் பூநகரிக்கு வந்து அங்க இருந்து யாழ்ப்பாணம் வாறதுதான் டிப்பர்களின்ர மெயின் ரூட். அதுக்கு முக்கியமான காரணம் பொலிஸ்தான். ஏ-9 றோட்டில முழத்துக்கு முழம் பொலிஸ் நிக்கும். அவைக்கு அஞ்சைப் பத்தைக் குடுத்துத்தான் டிப்பர்கள் வரவேணும். ஆனால் பரந்தன்- பூநகரி - யாழ்ப்பாணம் எண்டு வாற பாதையில பொலிஸ் நிக்கிறது வலுகுறைவு. அதால கள்ளமண் ஏத்துற டிப்பர் எல்லாம் இதாலதான் வாறதுகள். அப்பிடி பாரத்தோட எக்கச்சக்கம் டிப்பர்கள் வந்து போனால், என்ன தான் இரும்பில றோட்டுப் போட்டாலும் பிளக்கத் தான் செய்யும். அதால டிப்பர்களின்ர போக்கு வரத்தை இந்தப் பாதையில கட்டுப்படுத்தினால் தான் அந்தறோட்டு இன்னும் கொஞ்சக்காலம் எண்டாலும் இருக்கும்.

அதைவிட இப்ப டிப்பர்களின்ர பாரம் தாங்காமல் பொருமிப் போய் பொங்கிக் கிடக்கிற இடங்களை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்காரர் சீர் செய்யிறம் எண்டிட்டு, கிடங்கு வெட்டி, தார் ஊத்தி, மேலால கல்லுப் போட்டு மெழுகி விளையாடுகினம். உதைவிட சின்னப்பிள்ளையள் மண் தப்பி விளையாடுறது ஒழுங்கா இருக்கும். ஏதோ கடமைக்கு அந்தப் பள்ளங்களை அடைச்சால் சரி எண்டு வேலை செய்யிறதால, இன்னும் மோசமா அந்த றோட்டு மாறிக்கொண்டு வருகுது. ஒரு பக்கம் வீதி அபிவிருத்தி அதிகார சபை தாரும், கல்லும் அப்பி விளையாட மற்றப்பக்கத்தால் இன்னும் மோசமா றோட்டு பொருமிக் கொண்டே வருகுது. இப்பிடியே போனால் கெதியில முழு றோட்டும் பொருமிப் போடும். அதுக்கிடையில பொருமின இடங்களை மட்டுமில்லாமல் அதுக்குப் பக்கத்தில சேதமா கலாம் எண்ட நிலையில இருக்கிற பகுதிகளையும் சேர்த்து. ஒழுங்கான முறையில செப்பனிட்டால் வீதி அபிவிருத்தி அதிகார சபை குறைஞ்சு போகாது தானே?

றோட்டு நல்லா இருந்தால் அவைக்குத்தானே பெருமை. ஏதோ சொல்லவேணும் போல இருந்திச்சு சொல்லிட்டம். மாரிக்குள்ள சனம் அந்த றோட்டால போய்வரப் படுகிற பாட்டை பாத்தா பயங்கரமாக் கிடக்கு. இனி இந்தப் பட்சியின்ர சொல்லைக் கேக்கிறதும் விடுறதும் அதிகாரியளின்ர விருப்பம்.



- பட்சி

# வேலணைக் கோட்டத்தில் ஆசிரியர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.30

**இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில், வேலணைக் கல்விக் கோட்டத்தின் முன்பாக நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**




பாடசாலைக்குச் சென்று தமது பணி நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தபின் ஆசிரியர்கள் போராட்டத்தில் பங்குபற்றினர்.

நாடு முழுவதும் உள்ள கல்வி வலயங்களில் இலங்கை ஆசிரியர் சங்கத்தால் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், தீவகக் கல்வி வலயத்தில் வேலணைக் கோட்டத்தின் முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

" நீக்கு! நீக்கு! அதிபர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்கு!, வேண்டும் வேண்டும் கல்விக்கு 6 வீதம் வேண்டும்!, உறுதிப்படுத்து உறுதிப்படுத்து பிள்ளைகளின் கல்வி உரிமையை உறுதிப்படுத்து!, வழங்கு வழங்கு அதிபர் ஆசிரியரின் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு வழங்கு!, வழங்கு வழங்கு 24 வருடங்களாக கொள்ளையடித்த ஆசிரியர்களின் பணத்தை வழங்கு!, நீக்கு நீக்கு இராணுவ மயமாகும் முன்பள்ளிக் கல்வி முறையை நீக்கு! விற்காதே இலவசக் கல்வியை பணத்துக்கு விற்காதே! போன்ற கோஷங்களை எழுப்பியவாறு ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர் .

"எமது தொழிற்சங்கப் போராட்டமானது 105 நாள்களையும் கடந்து சென்று கொண்டிருக்கின்றது. தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தை நிறுத்தப் போவதில்லை. வடக்கு, கிழக்கில் ஆசிரியர்களினுடைய வரவு தொடர்பில் பொய்யான தகவல்களை அதிகாரிகள் வழங்கியுள்ளனர். படு முட்டாள்தனமான செயற்பாட்டில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது" என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் தெரிவித்தார். (ஒ-4-25-27)

## படகுச்சேவைகளின் கட்டணம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக்.30

அனலைதீவு மற்றும் எழுவைதீவுக்கான பயணிகள் படகுச் சேவைகளின் கட்டணங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட விலை நிர்ணயக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைவாக நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் படகுச்சேவைக் கட்டணங்கள் மாற்றப்பட்டுள்ளன.

அதற்கமைவாக கண்ணகியம்மன் துறை- அனலைதீவுக்கான கட்டணம் 60 ரூபாவாகவும், கண்ணகியம்மன் துறை- எழுவைதீவுக்கான கட்டணம் 40 ரூபாவாகவும் மாற்றப்பட்டுள்ளது என்று ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ-4)

## அங்காடி வியாபாரம் தடை

சாவகச்சேரி, ஒக். 30

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பண்டிகைக் கால அங்காடி வியாபாரம் தடை செய்யப்பட்டுள்ளது என்று தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.

பண்டிகைக் காலங்களில் வெளியூர் அங்காடி வியாபாரிகள் நகரசபை சந்தையை அண்டிய பகுதிகளில் வியாபாரம் செய்து வந்தனர்.

தற்போது கொரோனாத் தொற்று நிலைமையால் சுகாதாரப் பகுதியினர் பண்டிகைக் கால அங்காடி வியாபாரத்துக்குத் தடை விதித்திருந்தனர்.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு வெளியூர் வியாபாரிகள் பலர் வியாபாரத்துக்கு மூன்று தினங்கள் அனுமதி வழங்குமாறு கோரியிருந்தனர்.

எனினும் சபையின் கடந்த அமர்வில் அங்காடி வியாபாரத்தை அனுமதிப்பதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. அதனால் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4)

## ஒரு லட்சம் பேருக்கு காணி; மன்னாரில் நேர்முகத்தேர்வு

கொழும்பு, ஒக்.30

இளம் தொழில் முனைவோருக்கு நாடு முழுவதும் ஒரு லட்சம் காணித்துண்டுகள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்துக்கு அமைவாக, மன்னாரில் காணிகளைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர் பிரதேச செயலரின் வழிகாட்டலில், மன்னார் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி கனகாம்பிகை சிவசம்பு தலைமையில், காணிக்கிளை அதிகாரிகளால் முதல்கட்ட நேர்முகத்தேர்வு இடம்பெற்று வருகின்றது.

விண்ணப்பதாரிகளின் சுய தொழில் தொடர்பான திட்ட முன்மொழிவு மற்றும் நிதி விவரம் தொடர்பான ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

ஒரே தடவையில் நூற்றுக்கணக்கான விண்ணப்பதாரிகள் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டிருந்தமையால், அங்கு விண்ணப்பதாரிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. (ஒ-4-56)

### உறவினரைப் பார்வையிட வந்தவர்

## தவறான முடிவுக்கு முயற்சித்ததால் பதற்றநிலை!

சாவகச்சேரி ஒக்.30

மருத்துவமனையின் விடுதியில் தங்கியுள்ள உறவினரைப் பார்வையிட வந்திருந்த இளைஞரொருவர் விடுதிக்குள் வைத்து நஞ்சு அருந்தியமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சாவகச்சேரியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சாவகச்சேரி மருத்துவமனையின் பெண்கள் விடுதியில் 36 வயதுப் பெண் ஒருவர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். இவரைப் பார்வையிட வந்த இளைஞனே நஞ்சு அருந்தியுள்ளார். இவர் உடனடியாக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-9)

## கந்தசஷ்டி விரத உற்சவம்

யாழ்ப்பாணம், ஒக்.30

நல்லூர் சிறிபாலகதிர்காம ஆலயத்தில் கந்தசஷ்டி விரத உற்சவம் எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 10 ஆம் திகதி புதன்கிழமை வரை இடம்பெறும்.

விசேட அபிஷேகத்துடன் பூசைகள் ஆரம்பமாகி 5 நாள்கள் விரதம் அனுஷ்டிக்கப்பட்டு, ஆறாம் நாள் சூரசம்ஹாரம் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து மறுநாள் 108 சங்காபிஷேகமும், பாறணைப் பூசையும் இடம்பெறும். மாலை 6 மணிக்கு பட்டாபிஷேக வைபவமும் இடம்பெறும். (ஒ-4)

### ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வை நிச்சயம் தருவோம்

### பிரதமர் மஹிந்த உறுதி



கொழும்பு, ஒக். 30

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசால் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பை நாம் நிச்சயமாக நிறைவேற்றுவோம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

கொட்டாஞ்சேனை புனித லூசியா பேராலயத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசினால் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பை நாம் நிச்சயம் நிறைவேற்றுவோம்.

எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மக்களுக்கு நிம்மதியாக வாழவும் சுதந்திரமாக பயணிக்கவும், தமது மதத்தை பின்பற்றவும் கோவிலுக்கு, பள்ளிக்கு, விகாரைக்கு சென்று வருவதற்கான உரிமையும் இருக்க வேண்டும்.

அந்த உரிமையைப் பாதுகாப்பது போன்றே மதச் சுதந்திரத்தை அனுபவிக்க, அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் மற்றும் அவர்களின் மதத்தை பின்பற்ற அனுமதிக்க வேண்டும்.

அவ்வாறாயின் அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

குறிப்பாக பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையைச் சந்திக்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவர் நினைவுபடுத்தும் ஒரு விடயம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓர் அரசு என்ற ரீதியில் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும் என்பதாகும். எம்மால் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்பை நாம் நிச்சயம் நிறைவேற்றுவோம் -என்றார். (ம)

## இரகசிய பழிவாங்கல் விசாரணை: ஆணைக்குழுவின் காலம் நீடிப்பு!

கொழும்பு, ஒக்.30

இரகசியப் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்கும் காலம் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கால நீடிப்புத் தொடர்பாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கையொப்பத்துடன் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கும் காலஅவகாசம் நேற்றுமுன்தினத்துடன் முடிவடைந்த நிலையிலேயே, 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ஆம் திகதிவரை கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த அரசின் காலத்தில் நடைபெற்றன என்று கருதப்படும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் நோக்குடன் இந்த ஆணைக்குழு கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 28ஆம் திகதி நியமிக்கப்பட்டது. (எ-இ)



தனது சேவைக்காலத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பவுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பீ.டெப்லிட்ஸ், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார். அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்புகளை அதிகரித்துக் கொள்வதற்காக அலெய்னா வழங்கிய ஒத்துழைப்புகளைப் பாராட்டிய ஜனாதிபதி கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்கு அமெரிக்கா வழங்கிய உதவிகளையும் பாராட்டினார். (ம)

# அரச, தனியார் ஊழியர்களுக்கு ரூ.10 ஆயிரம் சம்பள அதிகரிப்பு

## தொழிற்சங்கங்கள் வலியுறுத்து



கொழும்பு,ஒக்.30

**தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு ஏற்ப, அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு அவசியமான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன.**

இது தொடர்பில்அனைத்து நிறுவனங்களின் ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க, அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஜயந்த பண்டார மற்றும் ஜே.வி.பியின் நிர்வாகச் செயலாளர் கே.டி. லால்காந்த ஆகியோர் தெரிவிக்கையில்:

ஆட்சியாளர்கள் பேச்சு நடத்த நடவடிக்கை எடுத்தால் நாங்களும் அதற்குத் தயார். அரச, தனியார் துறையினருக்கு 10 ஆயிரம் ரூபா வேதன அதிகரிப்பு அவசியமாகும். அடுத்த பாதீட்டில் வேதன அதிகரிப்பு இடம்பெறாவிட்டால், எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுக்க உள்ளோம் - என்றனர். (ஒ-4)

## யுகதனவி மின்நிலைய விவகாரம்; அவதானிப்பு முன்வைக்க ஒப்புதல்

கொழும்பு, ஒக்.30

யுகதனவி அனல் மின் நிலையம் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரத்துக்கு அவதானிப்புகளை முன்வைப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன கூட்டணிக் கட்சித் தலைவர்கள் மத்தியில் ஒப்புதல் எட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் கட்சித் தலைவர்கள் இதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளனர் என்று கூறப்படுகின்றது. இந்தக் கலந்துரையாடல் அலரி மாளிகையில் நடந்துள்ளது.

இந்தச்சந்திப்பில்கொரோனாத் தொற்று நிலைமை, அதிபர் ஆசிரியர் சம்பளப் பிரச்சினை, சுற்றுலாத்துறை பிரச்சினைகள், துறைமுக அதிகார சபையின் மேற்கு மற்றும் கிழக்கு முனைய அபி விருத்தி, பொருள்களின் விலையேற்றம், இயற்கை விவ்சாயம் மற்றும் உரப் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளன என்றும் பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.30

வடக்கு முஸ்லிம் மக்களின் வெளியேற்றத்தின் 31 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சிறப்புக் கலந்துரையாடல் இன்று மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண முஸ்லிம் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் "வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தமிழ் மக்களின் தார்மீகக் கடமை" எனும் கருப்பொருளில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (ஐ)

## தமிழ் மக்களுக்குத் தனிநாட்டை வலியுறுத்துகின்றதா செயலணி?

### முன்னாள் எம்.பி. அரியநேந்திரன் கேள்வி

கொழும்பு, ஒக். 30

'ஒரு நாடு: ஒரு சட்டம்' எனும் பெயரில் ஜனாதிபதியால் உருவாக்கப்பட்ட செயலணியில் உறுப்பினர்களில் தமிழர்கள் எவரும் இடம்பெறாமை தமிழர்களுக்குத் தனிநாடு உள்ளது என்பதையே கோடிட்டுக் காட்டுகிறது என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான பா.அரிய நேத்திரன் தெரிவித்தார்.

'ஒரு நாடு ஒரு சட்டம்' தொடர்பான செயலணி தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்ச்சைக்குரிய ஞானசார தேரரை தலைவராகக்கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்த செயலணியில் தமிழர்கள் எவரும் அங்கம் வகிக்காமை தமிழர்களுக்கு ஒருநாடு இலங்கையில் இல்லை அவர்களுக்கு தனிநாடு இருக்கிறது என்ற எண்ணமே இதன் மூலம் சொல்லாமல் சொல்லப்பட்டுள்ளது.


இந்த செயலணியில் 13 பேரில் ஒன்பது சிங்களவரும், நான்கு முஸ்லிம்களும் நியமிக்கப்பட் டுள்ளமையை தமிழர்களை முற்றாக புறம்தள்ளும் செயலாகவே பார்க்க முடிகிறது.

இந்த செயலணி மீது நம்பிக்கையில்லை என்பது ஒருபுறம் இருக்க மூன்று இன மக்கள் வாழும் ஒரு நாட்டில் ஒரு இனத்தை புறக்கணித்து



எப்படி ஒரு நாடு ஒரு சட்டம் உருவாக்க முடியும். உண்மையில் பக்கச் சார்பற்ற ஒரு நடுநிலை செயலணியாக இது அமைக்கப்பட வேண்டுமானால் தமி ழர்களும் இந்தச் செயலணியில் உள்வாங்கப்பட்டிருக்க வேண்டும். மாறாக இந்த விடயத்தில் கூட ஜனாதிபதி தமிழர்களை அலட்சியப்படுத்தியுள்ளார் என்று கருதவேண்டியுள்ளது - என்றார். (ம)

## சேர் லின்ட்சேயை சந்தித்தார் பீரிஸ்!



கொழும்பு, ஒக்.30

பொதுமக்கள் அவையின் சபாநாயகர் சேர் லிண்ட்சே ஹொய்லுக்கும், வெளியுறவுத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸுக்கும் இடையே சந்திப்பொன்று நடந்துள்ளது. இந்தச் சந்திப்பு கடந்த செவ்வாய்க் கிழமை நடந்துள் ளது.

இந்தச் சந்திப்பில் வெஸ்ட் மினிஸ்டர் நாடாளுமன்றத்தின் பிரதியமைப்பாக இலங்கை நாடாளுமன்றம் உருவானமையை நினைவு கூர்ந்த அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், இரண்டு சட்டவாக்க சபைகளுக்கும் இடையிலான பிணைப்புக்களை வலுப்படுத்துவதில் இலங்கை ஆர்வமாக இருப்பதாகத் தெரிவித்தார்.

சந்திப்பில் கருத்துத் தெரிவித்த சேர் லிண்ட்சே பொது நலவாயம் என்பது ஒரு குடும்பம் என்றும், அது ஒருவருக்கு ஒருவர் உதவிகளை நல்கும் என்றும் ஒப்புக்கொண்டார். பௌதிக ரீதியில் சாத்தியமான வரை விரைவில் இலங்கைக்கு நேரில் வருவதற்கான அழைப்பை சேர் லிண்ட்சே ஏற்றுக்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## நுண்கலை வகுப்புக்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.30

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தால் இலவசமாக நடத்தப்படும் கர்நாடக சங்கீதம்,வயலின், வீணை, மிருதங்கம், நடனம் ஆகிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கும் வகுப்புக்கள் பிரதி சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 1 மணி தொடக்கம் 5 மணி வரை இடம்பெறும்.

மேலதிக விவரங்களை சட்டநாதர் வீதியிலுள்ள இளங்கலைஞர் மன்றத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்று மன்றத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ-4)

# இந்திய நாட்டரிசி ரூ.98 க்கு விற்பனை



**கொழும்பு, ஒக்.30**

**இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நாட்டரிசி நேற்று முதல் ஒரு கிலோ கிராம் 98 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது என்று சதொச நிறுவனத்தின் தலைவர் ஆனந்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

நுகர்வோருக்கு நியாயமான விலையில் அரிசியை விற்பனை செய்யும் நடவடிக்கைகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.


இதுவரையில் நாட்டரிசி அடங்கிய 9 கொள்கலன்கள் எமது நிறுவனத்துக்குக் கிடைத்துள்ளன.

அதேவேளை கொழும்பு துறைமுகத்தில் தேங்கிய சீனி அடங்கிய 81 கொள்கலன்களும் சதொச நிறுவனத்துக்கு விடுவிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைவாக சீனியைக் கட்டுப்பாட்டு விலையின் கீழ், சதொச கிளைகளூடாக மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4)

# ஆட்சியைத் தக்கவைக்கும் நோக்குடன் உருவாகியதே ஒரே நாடு, ஒரே சட்டம்

## ஹக்கிம் விளாசல்



கொழும்பு, ஒக். 30

ஆட்சியை எப்படியாவது கைப்பற்றிவிட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக ஏற்படுத்தப்பட்டதே 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற செயலணி என்று தெரிவித்தார் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கிம்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இனங்களுக்கிடையிலான வன்செயல்களைத் தொடர்ச்சியாகத் தூண்டி வருபவரான ஞானசார தேரர் அந்த அமைப்புக்குத் தலைவராக நியமிக்கப்பட்டதையும் நாம் கடுமையாகக் கண்டிக்கின்றோம் .

'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற விவகாரம் பற்றி பல்லின சமூகத்தவர் வாழும் இலங்கையில், மக்கள் மத்தியிலும் பொது வெளியிலும் தாறுமாறான கருத்துக்கள் பரவலாக நிலவிவரும் நிலையிலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையான நோக்கம் ஆட்சிமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டதா என்ற பலத்த சந்தேகம் வலுப்பெற்று வரும் நிலையிலும், இன முறுகலைத் தொடர்ச்சியாகத் தோற்றுவித்து, வன்செயல்களைத் தூண்டி வருபவரும், குறிப்பாக இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும், அல்லாஹ்வையும் பகிரங்கமாகவே நிந்தித்து வருபவரும், பொதுவாக பௌத்தம் தவிர்ந்த ஏனைய சமயங்கள் மீது பகிரங்கமாகத் தமது வெறுப்புணர்வை கொட்டித் தீர்த்து வருபவருமான ஞானசார தேரரை தலைவராக நியமித்திருப்பது இனங்களுக்கிடையிலான துருவப்படுத்தலை மேலும் மோசமான நிலைமைக்கே இட்டுச்செல்லும்.

அரசின் இந்தச் செயற்பாடானது நாட்டில் அமைதியின்மை தொடர்வதற்கும் இனங்களுக்கிடையிலான மோதல்கள் அடிக்கடி நிகழ்வதற்கும் தூபமிடும் செயலாகவே அமைந்துள்ளது. ஒரு சாராரைத் திருப்திப்படுத்துவதற்காகவே இவ்வாறு நடக்கின்றதென நம்புவதோடு, இதன் பின்னணியில் மறைகரங்களும், வெளிச்சக்திகளும் இருக்கலாம் என்ற சந்தேகம் மேலெழுவதும் இயல்பானதே. அரசு மீது நாட்டு மக்கள் மத்தியில் அதிருப்தி அதிகரித்து, அதன் செல்வாக்கு சரிந்துவரும் காரணத்தினால், அரசின் பலவீனத்தை மூடி மறைப்பதற்கும் மக்களின் கவனத்தை வேறு திசையில் திருப்புவதற்கும் இவ்வாறான கீழ்த்தரமான அணுகுமுறைகள் கையாளப்பட்டு வருவது கண்கூடாகும் - என்றார். (ம-30)

# சி.ஐ.டி. பிரதானியாக திலகரத்ன நியமனம்

கொழும்பு,ஒக்.30

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதானியாக டபிள்யூ. திலகரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றிய இவர், உடன் நடைமுறைக்கு வரும் வகையில் சி.ஐ.டி. பிரதானியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை சி.ஐ.டி.யின் பிரதானியாகக் கடமையாற்றிய பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரசாத் ரணசிங்க, பொலிஸ் தலைமையகத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆட்சி மாற்றத்தின் பின்னர், சி.ஐ.டி.யின் பணிப்பாளராக இருந்த ஷானி அபேசேகரவை அந்தப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, டபிள்யூ. திலகரத்ன பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

அதன் பின்னரேயே பிரதிப் பொலிஸ்மா அதிபராக தரமுயர்த்தப்பட்டு மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

திலகரத்னவின் இடமாற்றத்தை அடுத்து வெற்றிடமான மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவியின் கடமைகளை முன்னெடுக்கும் பொறுப்பு காலி பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.என்.ஜே. வதசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

## ஒரே நாடு, ஒரே சட்டம்

# ஜனாதிபதி செயலணியிடம் போதிய இயலுமையில்லை!

கொழும்பு, ஒக். 30

சட்டங்களை மனித உரிமைகள்சார் தரத்துக்கு அமைவாக மாற்றியமைப்பதாக இருந்தால், அதனைச் செய்வதற்கான இயலுமையும் நேர்மையுடைய பிரதிநிதிகளால் வழிநடத்தப்படுகின்ற தேர்ச்சி பெற்ற குழுவொன்றும் அவசியமாகும். இருப்பினும் தற்போது ஞானசாரதேரர் தலைமையில் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய புதிய ஜனாதிபதி செயலணி அதற்கு முற்றிலும் நேர்மாறானதாகவே காணப்படுகின்றது என்று மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் சூழ்நிலையில் இச்செயலணி உருவாக்கப்பட்டிருப்பதும் மதச்சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் மற்றும் வன்முறைகளுடன் சம்பந்தப்பட்டிருந்த பௌத்த தேரர் அதற்குத் தலைமைதாங்குவதும் மிகுந்த கரிசனைகளைத் தோற்றுவித்துள்ளது. அதேவேளை கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற கோஷம் மேலோங்கியதுடன் அது குறிப்பாக பெரும்பான்மைவாதக் கொள்கைகளை முன்னிலைப்படுத்துவதாக அமைந்திருந்ததே தவிர, சட்டம் அனைவருக்கும் சமத்துவமான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதையோ அல்லது அதன்கீழ் அனைவரும் ஒரேவிதமான பாதுகாப்பைப் பெறுவதையோ அது முன்னிலைப்படுத்தவில்லை - என்றுள்ளது. (ம)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஒக்.30

நல்லூர் சிறிபால கதிர்காம ஆலய சம்புரோக்ஸன பிராயசித்த கும்பாபிஷேகம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் முற்பகல் 10.30 மணி வரை இடம் பெறும். (ஒ-4)



# சுகாதாரத் துறையினரை மகிழ்விக்கும் நிகழ்வு

தெல்லிப்பழை,ஒக்.30

கொரோனா இடர்கால சூழலில் அளப்பரிய சேவைகளை ஆற்றிவரும் சுகாதாரத் துறையினரை மகிழ்ச்சிப்படுத்தும்முகமாக சிறப்பு நிகழ்வொன்று தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் 'பி ஹப்பி வித் யூ" எனும் தொனிப்பொருளில் இசை நிகழ்வுகள் நடைபெற்றன. நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் தமிந்த விக்கிரமசிங்க, தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் ப.திலீபன், இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாகாண ,மாவட்ட, பிரதேச உத்தியோகத்தர்கள், சுகாதாரத்துறையினர் மற்றும் இளைஞர் நாடாளு மன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-125)

# வெளிநாட்டு அமைச்சின் சேவைகள் விஸ்தரிப்பு

தற்போதைய கொரோனாத் தொற்று நிலைமையில், வெளிநாட்டு அமைச்சின் கொன்சியூலர் விவகாரப் பிரிவின் சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைவாக சான்றுறுதிப்படுத்தல் நோக்கங்களுக்காக வேலை நாள்களில் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை கொன்சியூலர் விவகாரப் பிரிவு செயற்படும். வரிசைகளில் நீண்ட நேரம் காத்திருப்பதைத் தவிர்ப்பதற்காகவும், பொதுமக்கள் ஒன்று கூடுவதை இலகுவாக்குவதற்காகவும் http://consular.mfa.gov.lk/ONLINEBOOKING என்ற இணைப்பின் மூலமும் இணையவழி நியமனங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். மாத்தறையில் சேவை பெறுநர் 041 2226697 என்ற தொலைபேசி இலக்கத்துடனும், யாழ்ப்பாணத்தில் சேவை பெறுநர் 021 2215972 என்ற தொலைபேசி இலக்கத்துடனும், கண்டியில் சேவை பெறுநர் 081 2384410 என்ற தொலைபேசி இலக்கத்துடனும், குருநாகலில் சேவை பெறுநர் 037 2225931 என்ற தொலைபேசி இலக்கத்துடனும், திருகோணமலையில் சேவை பெறுநர் 026 2223186 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ள முடியும் என்று வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது. (4)

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இதற்குத்தானா ஆசைப்பட்டோம்?


ஒரே நாடு ஒரே சட்டம் என்ற செயலணி ஜனாதிபதியால் அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்தச் செயலணிக்கு பௌத்த – சிங்கள கடும்போக்குவாதியான ஞானசார தேரர் தலைமையாக்கப்பட்டுள்ளார். அந்தச் செயலணிக்குள் 4 முஸ்லிம்கள் உள்வாங்கப்பட்டிருக்கின்றார்கள். ஏனைய 9 பேர் சிங்களவர்கள்.

இந்தச் செயலணிக்கு ஆரம்பத்தில் சிங்களவர்களும் முஸ்லிம்களும் மாத்திரம் உள்வாங்கப்பட்டுள்ளனர். தமிழர்கள் எவருமே உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் தமிழ் அரசியல் தலைவர்கள் வெகுண்டெழுந்தனர். பல முனை அழுத்தங்கள் காரணமாக இப்போது இந்தச் செயலணிக்குள் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தையும் உள்ளடக்க ஜனாதிபதி கோத்தாபய உத்தரவிட்டுள்ளார். தமிழர் பிரதிநிதித்துவம் இந்தச் செயலணிக்குள் வேண்டுமென்றுதானே ஆசைப்பட்டோம். அது நிறைவேறிவிட்டதால் இனிமேல் இந்தச் செயலணியால் முன்வைக்கப்படும் பரிந்துரைகள் நீதியாகவும், நியாயமானதாகவும், பல்லின மக்களுக்கு பொருத்தமானதாகவும் இருக்குமென தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் திருப்திப்பட்டுக்கொள்ள முடியுமா?

ஏனெனில் கடந்தகால அனுபவங்கள் கசப்பானவையாகவே சிறுபான்மையினருக்கு அமைந்திருக்கின்றன. ஏராளமான விடயங்களுக்கு செயலணிகளும், ஆணைக்குழுக்களும் அமைக்கப்பட்டபோதும், அவற்றின் மூலம் உருப்படியான எந்தவொரு காரியமும் ஒப்பேறவில்லை என்பதே யதார்த்தம். சிங்கள – பௌத்த திணிப்பை சட்டபூர்வமாக்குவதற்கும், நீதிக்கான காலத்தைக் கடத்துவதற்குமே செயலணிகளை இலங்கை அரசு தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வருகின்றது. அப்படி பத்தோடு பதினொன்றாகத்தான் இந்த ‘ஒரே நாடு, ஒரே சட்டம்’ செயலணியும் இருக்கப்போகின்றது. ஏனெனில் இந்தச் செயலணியின் தலைமைத்துவத் தெரிவே அதன் நோக்கம் என்னவென்பதை பட்டவர்த்தனமாகக் காட்டுகின்றது. கடைந்தெடுத்த பௌத்த – சிங்களப் பெருந்தேசியத்தின் பிரதிநிதியான கலகொட அத்த ஞானசார தேரர் தலைமையில் அமைக்கப்பட்ட செயலணி, சிறுபான்மையினர் மீது கரிசனை கொள்ளுமென்பதையோ, அவர்களின் அபிலாஷைகளைக் கணக்கில் எடுக்கும் என்பதையோ நம்புவதை விடவும் அபத்தமான காரியமொன்றும் இவ்வுலகில் இருக்கப்போவதில்லை.

அடிப்படையில் இந்தச் செயலணியும் அதற்கான எண்ணக் கருவுமே தவறானவை. இலங்கையில் பல்வேறு இனத்தவர்கள் வாழும் நிலையில் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற எண்ணமே ஏற்புடையதன்று. இந்த எண்ணக் கரு இலங்கையை பல கூறுகளாக, தனியன்களாக உடைந்து செல்வதற்கே உந்துசக்தியாக இருக்கும். ஏனெனில் ஒவ்வொரு இனக் குழுமமும் தனக்கெனத் தனித்துவமான பழக்கவழக்கங்கள், மரபுகள், கலாசாரங்கள் என்பவற்றைப் பின்பற்றுகிறது ஆனால் இப்படி சகல இனங்களும் ஒரே மாதிரித்தான் நடக்கவேண்டுமெனப் பலவந்தப்படுத்துவதன் மூலம், விரும்பத்தகாத விளைவுகளே ஏற்படும். அமைதியாக இருக்கும் நாடு , அதன் பின்னர் எப்போதும் கொதிநிலையிலேயே இருக்கும். அப்படி நாட்டை எரிய வைத்துவிட்டு, அந்தப் பகைமைத்தீயில் குளிர்காயத்தான் இந்தச் செயலணி உருவாக்கப்பட்டதோ தெரியவில்லை. நல்லிணக்கத்தை ஏற்படுத்துவோம் என்று ஐ.நா.வில் உறுதியெடுத்துவிட்டு, இருக்கின்ற கொஞ்ச நஞ்ச நல்லிணக்கத்தையும் இல்லாமல் செய்வதற்கான வேலைகளிலேயே அரசாங்கம் முழுமூச்சாக இறங்கியிருக்கின்றது.

எனவே ‘ஒரேநாடு, ஒரேசட்டம்’ என்கிற செயலணியையே இல்லாமல் செய்யத்தான் சிறுபான்மையினரானதமிழர்கள் போராடவேண்டுமேயொழிய, அந்தச் செயலணிக்குள் தமிழர்கள் உள்வாங்கப்படவேண்டும் என்றல்ல. ஏனெனில் அரசாங்கம் திட்டமிட்டே தமிழர்கள் எவ ரையும் முதலில் அந்தச் செயலணிக்குள் உள்வாங்கவில்லை. அப்போதுதான் நாமும் செயலணியின் நோக்கத்தை மறந்துவிட்டு, வழக்கம் போல தமிழ்ப் பிரதிநிதித்துவம் தேவை என்று போர்க்கொடி தூக்குவோம். பின்னர் ஏதோ அழுத்தங்களுக்குப் பணிந்து தமிழர் ஒருவரை நியமிப்பது போல அரசாங்கமும் நாடகமாடும். தமிழர் தரப்பும் ‘இதற்குத்தான் ஆசைப்பட்டோம்’ என்று திருப்திப்பட்டு செயலணியை மறைமுகமாக அங்கீகரித்துவிடும். பிறகென்ன, அரசாங்கம் என்ன நினைத்ததோ அது நன்றாகவே நடந்து தீரும்;நாடும் நாசமாகியே போகும்.




# ஜனாதிபதி செயலணிக்கு தமிழ்ப் பிரதிநிதித்துவம்!

### எதிர்ப்புகள் வலுத்த நிலையில் உடனடி நடவடிக்கைக்கு ஏற்பாடு

**கொழும்பு, ஒக். 30**

**‘ஒரே நாடு ஒரே சட்டம்' தொடர்பான ஜனாதிபதி செயலணிக்கு தமிழர்களையும் உள்வாங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.’ என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உறுதியளித்துள்ளார்.**

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசுக்கு ஆதரவு வழங்கும் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது. இதன்போதே ஜனாதிபதி இந்த உறுதிமொழியை வழங்கினார் என இ.தொ.காவின் உப தலைவரும், பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் ‘உதயனிடம்' தெரிவித்தார்.

‘கூடுதல் தமிழர்களை உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி கூறினார். ‘ஒரே நாடு, ஒரே சட்டம்’ என்பதை இலங்கையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கற்றாராய்ந்து, அதற்கான சட்டவரைவை தயாரிப்பதற்காகவும், இது விடயம் தொடர்பில் நிதி அமைச்சால் இதுவரை தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவுகள் மற்றும் திருத்தங்களை கற்றாராய்ந்து அவற்றில் திருத்தங்கள் இருப்பின் அதற்கான முன்மொழிவுகளை முன்வைப்பதற்காகவுமே செயலணி அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி செயலணியானது மாதம் ஒரு முறைஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும், 2022ஆம் ஆண்டு பெப்ரவரி 28ஆம் திகதிக்குள் இறுதி அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் பணிக்கப்பட்டுள்ளது.

13 பேரடங்கிய இந்த செயலணிக்கு முஸ்லிம்கள் உள்வாங்கப்பட்டுள்ளபோதிலும் தமிழர் எவரும் உள்வாங்கப்படவில்லை. இதற்கு கடும் எதிர்ப்புகள் வலுத்தன. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-44)

# இனவாதத்தை கையிலெடுத்து ஆட்சியை தக்க வைக்க முயற்சி

கொழும்பு, ஒக். 30

இனவாதம் மற்றும் மதவாதத்தைக் கக்கி, மக்களை பிளவுபடுத்தி ஆட்சியைப்பிடித்த இந்த அரசு, தற்போது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் அதே பாணியைக் கையாள்கின்றது. இதற்காகவே ஞானசார தேரர் தலைமையில் ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார குற்றஞ்சாட்டினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனவாதம் பேசி, மதவாதத்தைக் கையில் எடுத்து, மக்களை பிளவுபடுத்தி, மோதல்களை ஏற்படுத்தியே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. தற்போது எல்லா வழிகளிலும் தோல்வி கண்டுள்ளது. எனவே, ஆட்சியை தக்கவைத்துக்கொள்வதற்காக அன்று கையாண்ட யுக்திகளை கையாள முயற்சிக்கின்றது. ஞானசார தேரர் உள்ளிட்டவர்கள் இந்த அரசைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தனர். ஞானசார தேரர் யார் என்பது அனைவருக்கும் தெரியும். ஊடகவியலாளர் எக்னெலிகொடவின் மனைவியை அச்சுறுத்தினார். நீதி மன்றத்தை அவமதித்தார். இனங்களை இலக்கு வைத்து பரப்புரை முன்னெடுத்தார். இப்படியான ஒருவர் தலைமையில் ஒரே நாடு,



ஒரே சட்டம் எனும் ஜனாதிபதி செயலணி ஏன் அமைக்கப்பட வேண்டும்? இதன் நோக்கம் தெளிவாகின்றது.

இனவாதம், மதவாதம் உள்ளிட்ட விடயங்களை கைவிடுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அதேபோல உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துக்கு நீதிகோரிய அருட்தந்தையர்கள் தற்போது சி.ஐ.டிக்கு அழைக்கப்படுகின்றனர். இது நிறுத்தப்பட வேண்டும் - என்றார். (ஒ-44)

# சுகாதாரத் தொழிற்சங்கங்கள் நவம்பர் 9இல் வேலைநிறுத்தம்



**கொழும்பு,ஒக்.30**

**சுகாதார வல்லுநர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல தொழிற்சங்கங்கள் இணைந்து, எதிர்வரும் நவம்பர் மாதம் 9 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன.**

இது தொடர்பில் சுகாதார தொழில் வல்லுநர்கள் அமைப்பின் இணை அழைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவிக்கையில், ஆறு கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்படும். பல வருடங்களாக நீடித்து வரும் இந்தப் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. கலந்துரையாடல்களும் நடத்தப்படவில்லை.

எனவே, அனைத்து தொழிற்சங்கங்களும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடும். அவசர மற்றும் அத்தியாவசிய சேவைகள், கொரோனா தொடர்பான கடமைகள், மகப்பேறு, குழந்தைகள் மற்றும் புற்றுநோய் மருத்துவமனைகள் மற்றும் குருதி வங்கி ஆகியன அன்றைய தினம் வழக்கம்போல் செயற்படும்.

கொரோனாத் தொற்றைக் காரணம் காட்டி எமது பிரச்சினைகளை அரசு புறக்கணிக்கின்றது. இனி வேலை நிறுத்தத்தைத் தவிர வேறு வழியில்லை - என்றார். (ஒ-4)



## மரநடுகை நிகழ்வு

மன்னார்,ஒக்.30

'மரம் நடுவோம் எம் சந்ததியை காப்போம்' எனும் தொனிப்பொருளில் மர நடுகை நிகழ்வு மன்னார் பாலையடி புதுக்குளம் மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

வனவளத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் மர நடுகை நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், மாந்தை மேற்கு பிரதேச செயலர் கே.அரவிந்தராஜ்,மன்னார் மாவட்ட நீர்ப்பாசன பணிப்பாளர் என். ஜோகராஜா,மடு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.முகுந்தன் மற்றும் மன்னார் மாவட்ட வனவள திணைக்கள அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-56)

★ ★ ★



கிளிநொச்சி,ஒக்.30

மர நடுகைத் திட்டம் கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட உதவிப்பிரதேச செயலர், கண்டாவளை பிரதேச இராணுவ உயர் அதிகாரி, தரும புரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ



துறைசார் அலுவல்களுக்குத் தேவையான 50 நோயாளர் காவுவண்டிகள், 52 தண்ணீர் தாங்கிகள் (பவுசர்கள்), 62 டபிள்கப் வாகனங்கள் உள்ளிட்ட 164 வாகனங்கள் துறைசார் திணைக்களங்களுக்கு ஜனாதிபதியால் நேற்றுமுன்தினம் பகிர்ந்து வழங்கப்பட்டன. (ம)

## வெலிக்கடைச் சிறை விவகாரம் கைதிகள் மீது சட்ட நடவடிக்கை

கொழும்பு,ஒக்.30

வெலிக்கடைச் சிறைச்சாலையின் கூரையின் மேல் ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு, பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்த குற்றச்சாட்டில், கைதிகளுக்கு எதிராக, பொதுச் சொத்து சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர், சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்தன ஏகநாயக்க தெரிவிக்கையில்,

வெலிக்கடைச் சிறைச்சாலை வளாகத்தில் கைதிகள் குழுவொன்று போராட்டம் நடத்தியது சுமார் 54 கைதிகள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அதன் போது கட்டடங்களுக்கு பெரும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. சுமார் 10 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. போராட்டத்தில் ஈடுபட்ட கைதிகள் பூஸா சிறைச்சாலைக்கு மாற்றப்படவுள்ளனர்.

அவர்கள் மீது ஒழுக்காற்று விசாரணைகளுக்கு மேலதிகமாக, பொரளைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் - என்றார். (ஒ-4)



## தீயில் எரிந்து கருகின மோட்டார் சைக்கிள்கள்

வவுனியா,ஒக்.30

வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் இரு மோட்டார் சைக்கிள்கள் தீயில் எரிந்து கருகியுள்ளன.

இந்தச் சம்பவம் வவுனியா கூமாங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வீட்டில் யாருமில்லாத நிலையில் குறித்த மோட்டார் சைக்கிள்கள் தீப்பிடித்து எரிந்துள்ளன. இதனை அவதானித்த அயலவர்கள் வீட்டின் உரிமையாளருக்கு தகவல் வழங்கினர். இதன் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இருப்பினும் இரு மோட்டார் சைக்கிள்களும் பகுதியளவில் எரிந்துள்ளன.

சம்பவம் தொடர்பாக மோட்டார் சைக்கிள் உரிமையாளரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-110)

## ஈழத்தமிழர்கள் நலனுக்காக ஆலோசனைக்குழு அமைப்பு!

### தமிழக அரசு அரசாணை

கொழும்பு, ஒக். 30

இலங்கைத் தமிழர்களின் நலனுக்கான ஆலோசனைக் குழுவை அமைத்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவையில் கடந்த ஓகஸ்ட் 27ஆம் திகதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதன்படி, 'முகாம்களில் வசிக்கக்கூடிய இலங்கை அகதிகளுக்கும், வெளிப்பதிவில் உள்ள அகதிகளுக்கும் உரிய உதவிகளை வழங்கவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், குடியுரிமை வழங்குதல் மற்றும் அவர்களில் இலங்கை திரும்பும் அகதிகளுக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்தல் போன்ற நீண்டகாலத் தீர்வினைக் கண்டறிய ஏதுவாகவும், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டப்பேரவை உறுப்பினர், பொதுத்துறைச் செயலாளர், மறுவாழ்வுத்துறை இயக்குநர் மற்றும் பிற அரசு உயர் அலுவலர்கள், அரசு சாரா உறுப்பினர்கள், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுடைய பிரதிநிதி மற்றும் வெளிப்பதிவில் வசிக்கக்கூடிய அகதிகளுக்கான பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய ஓர் ஆலோசனைக் குழு நிச்சயமாக விரைவில் அமைக்கப்படும்' என அறிவித்தார்.

அதன்படி, இலங்கைத் தமிழர்களின் நலனுக்கான ஆலோசனைக் குழுவை அமைத்து தமிழக அரசு நேற்றுமுன்தினம் அரசாணை வெளியிட்டுள்ளது.

இந்த ஆலோசனைக் குழு, முகாம்களில் உட்கட்டமைப்பு, அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், கல்வி - சமூகப் பாதுகாப்பு உதவிக்கு வகை செய்தல், குடியுரிமை, இலங்கைக்கு விரும்பிச் செல்லுதல் ஆகிய அம்சங்களை உள்ளடக்கிச் செயல்படும் என்று அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## அருங்காட்சியகம் அங்குரார்ப்பணம்

கொடிகாமம்,ஒக்.30

இணையவழி அருங்காட்சியக அங்குரார்ப்பண நிகழ்வு யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ்) நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் சுஜிவா சிவதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் இ.இளங்கோவன் கலந்துகொள்ளவுள்ளார்.

யாழ்ப்பாணப் பெட்டகம் நிழலுருக் கலைக்கூடம் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள நிதி அனுசரணையுடன் இந்த இணைய வழி அருங்காட்சியகத்தை உருவாக்கியுள்ளது. (ஐ-159)

## வீதிகளில் தேங்கும் வெள்ளத்தை தவிர்க்க பிரதேசசபை நடவடிக்கை

கிளிநொச்சி,ஒக்.30
மழை காரணமாக வீதிகளில் தேங்கும் வெள்ளத்தைத் தவிர்க்கும் வேலைத் திட்டத்தில் பச்சிலைப் பள்ளி பிரதேசசபை ஈடுபட்டுள்ளது என்று தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்துள்ளார்.

பெரும் மழையின்போது வீதிகளில் வெள்ளம் தேங்கி நின்று போக்குவரத்துக்கு இடையூறான நிலை கடந்த காலங்களில் ஏற்பட்டது.



இதனைத் தவிர்க்கும் நோக்கில் வெள்ளம் தேங்கி நிற்கும் பகுதிகள் அடையாளம் காணப்பட்டு, வெள்ளம் வடிந்தோடுவதற்கான வசதிகள் பிரதேசசபையால் தற்போது முன்னெடுக்கப் பட்டுள்ளன.

இயக்கச்சிப் பகுதியில் மழை வெள்ளத்தால் தேங்குகின்ற நீர் குளத்துக்குள் செல்லக்கூடிய வகையில் வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது. -என்றார். (ஐ-13)

## காணிகளைத் துப்புரவு செய்யுமாறு அறிவித்தல்

வவுனியா.ஒக்.30
நீண்டகாலமாக துப்பரவு செய்யப்படாமல் காணப்படும் காணிகளைத் துப்புரவு செய்யுமாறு வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட துப்புரவு செய்யப்படாத காணி உரிமையாளர்களின் பெயர் விவரங்கள் கிராம அலுவலர் அலுவலகங்களிலும் முக்கிய இடங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை பிரதேச செயலகத்தின் அறிவித்தலை ஏற்றுக்கொண்ட பல காணி உரிமையாளர்கள் தமது காணிகளைத் துப்புரவு செய்து பயிர்ச் செய்கை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ-13)



## கோழிக்குஞ்சுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.30
வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு கோழிக் குஞ்சுகள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன. தாவடி, ஆனைக் கோட்டை, சங்கரத்தை, கீரிமலை, சுதுமலை மற்றும் அளவெட்டி ஆகிய பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவரான மகேந்திரராஜாவின் நிதியுதவியில் 'பிரான்ஸ் பொன்மணி' அறக்கட்டளை நிறுவுநர் குமாரசிங்கம் முத்துக்குமாரால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-27)

# வியாபாரமாக மாறும் பண்பாட்டு நிகழ்வுகள்

கொடிகாமம்,ஒக்.30
**சைவத்தமிழர்களின் கலாசாரப் பண்பாடுகள், சமயச் சடங்குகள், விழாக்கள், பண்டிகைகள் என்பன தற்போது வியாபாரம் ஆகிவிட்டன என்று இலங்கை இந்து சமயத் தொண்டர் சபையினர் தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காலங்காலமாக எமது மூதாதையர்களால் கட்டிக்காத்து வந்த எமது சைவசமயப் பண்டிகைகள் எதிர்காலத்தில் இல்லாமல் போவதோடு, எதிர்கால சந்ததியினருக்கு தெரியாமலே போய்விடும் நிலையே உருவாகி வருகின்றது.

ஒரு சிலர் சைவசமயப் பண்டிகைகள், விழாக்கள், ஆலயத் திருவிழாக்கள், பூசைகள் என்பனவற்றைச் செய்வதற்கு பேரம் பேசுகின்றனர். பணமே பண்பாட்டைத் தீர்மானிக்கும் கருவியாகின்றது. வறியவர்கள் வழிபாடு செய்ய ஆசைப்பட்டாலும், பணமின்மையால், மழுங்கடிக்கப்படுகிறது.

அவர்கள் எதிர்காலத்தில் மதம் மாறலாம்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதற்கு முற்றுப் புள்ளி வைக்காவிடின் சைவத்தமிழ் கலாசாரப் பண்பாடு கேள்விக் குறியாகிவிடும்- என்றுள்ளது. (ஒ-4-159)





கலட்டி பணிப்புலம் ஐயப்பன் கோவில் கும்பாபிஷேகம் கடந்த புதன்கிழமை சிறப்புற இடம்பெற்றது. (ஒ-4)

## காற்று,மழையால் பாதிக்கப்பட்ட 21 வீடுகளுக்கு இழப்பீடு

வவுனியா,ஒக்.30
வவுனியாவில் மழை மற்றும் காற்று காரணமாக பாதிப்படைந்த 21 வீடுகளுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக மழை பெய்து வருவதுடன், அவ்வப்போது காற்றும் வீசி வருகின்றது. இதனால் வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாரதிபுரம், இராசேந்திரகுளம் மற்றும் விக்ஸ்காடு ஆகிய பகுதிகளில் 15 வீடுகளும், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் சூடுவெந்தபுலவு பகுதியில் 6 வீடுகளுமாக 21 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இவ்வாறு பாதிக்கப்பட்ட வீடுகளுக்கே இழப்பீடு வழங்கப்படவுள்ளது -என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-18)

## மொழி சமத்துவம்; சிறப்புச் செயலமர்வு

மன்னார்,ஒக்.30
மொழி சமத்துவம் தொடர்பான சிறப்புச் செயலமர்வு மன்னாரில் இடம்பெற்றது.

மொழி சமத்துவத்தை மேம்படுத்துவதன் ஊடாக சமூக ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான கூட்டு நடவடிக்கையை மேற்கொள்ளும் முகமாக தேசியரீதியில் செயற்பட்டுவரும் கிழக்கு அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் இந்தச் செயலமர்வு நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் தேசிய மொழிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர்,பிரதிப் பணிப்பாளர்,கொள்கையாக்கல் மற்றும் கற்பித்தல் நிபுணர்களால் மொழிக் கொள்கை தொடர்பான விரிவுரைகள் வழங்கப்பட்டன. செயலமர்வில் மொழி ரீதியான உரிமைகள் தொடர்பாக நடைமுறைப்படுத்தவேண்டிய செயற்பாடுகள் மற்றும் மேற்கொள்ளவேண்டிய மாற்றங்கள் தொடர்பாக பங்குபற்றுநர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டதுடன், அவை அரச கருமமொழி ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. (ஐ-213)



## வெள்ளம் வடிந்தோடக்கூடிய வகையில் வடிகால் வசதிகளை ஏற்படுத்தித் தரவும்

### பொதுமக்கள் கோரிக்கை

மாங்குளம்,ஒக்.30
மாங்குளம் நகரத்தில் வெள்ளம் வடிந்தோடக் கூடிய வகையில் வடிகால் வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்:

மழைகாலத்தில் மாங்குளத்தில் உள்ள சிறிய மூன்று குளங்களின் நீர் நகரை நோக்கி பாய்ந்து வருவதன் காரணமாக, மாங்குளம் நகரத்தில் சந்தை உள்ளிட்ட பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் நிலை காணப் படுகிறது. 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் மாங்குளம் நகரத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதில்லை. அதற்காக அமைக்கப்பட்ட பாலங்கள், மதகுகள் ஊடாக வெள்ளம் வடிந்தோடும். ஆனால், தற்போது வெள்ளம் வடிந்தோட முடியாதளவுக்கு வீதிகள், கட்டட அமைப்புக்கள் காணப் படுகின்றன.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மழை காலங்களில் வெள்ளம் வடிந்தோடக்கூடிய வகையில் வேலைத்திட்டங்களை முன்னெடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம் - என்றனர். (ஐ-13)

## மதகு தூர்வாரப்படாமையால் வீடுகளுக்குள் புகும் வெள்ளம்

கொடிகாமம் ஒக் 30
நெல்லியடி- கொடிகாமம் வீதியில் குடவத்தை கோவிலுக்கு அருகாமையில் உள்ள மதகு நீண்ட காலமாக தூர்வாரப்படாமல் இருப்பதால் மழை நீர் குடிமனைகளுக்குள் செல்வதாக பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வெள்ளம் வழிந்தோடக் கூடிய வாய்க்கால் நீண்ட காலமாக சீரமைக்கப்படாமையால் மழை வெள்ளம் தேங்குகின்றது. இதனால் அப்பகுதியில் வசிக்கும் 150 குடும்பங்களுக்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளன இதனால் குடியிருப்புக்கள் மட்டுமின்றி விவசாய நிலங்களும், வயல்களும் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் பிரதேச சபைக்கு பல தடவைகள் அறிவித்தும் இதுவரை [illegible] தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட [illegible] எனவே தற்போ[illegible] காலம் ஆரம்பித்து [illegible] மதகைத்தூர்வாரு[illegible] வடிக்கைகளை உ[illegible] ரிகள் எடுக்க [illegible] று கோரிக்கை [illegible] றோம்- என்றனர். [illegible]

மன்னார் மாவட்டத்தில்

# காலபோக நெற்செய்கையில் விவசாயிகள் ஆர்வமில்லை

## உரத்தடையே முதற்காரணம்

**மன்னார்,ஒக்.30**

**மன்னார் மாவட்டத்தில் 5 வீதத்துக்குக் குறைவான காணிகளிலேயே இந்த வருடம் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கட்டுக்கரைக் குள விவசாயிகளின் சம்மேளனத் தலைவர் எம்.எஸ்.சில்வா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
மன்னார் மாவட்டத்தில் 2021-2022 க்கான காலபோக நெற் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், விவசாயிகள் இந்தப் போகச் செய்கையில் தயக்கம் காட்டி வருகின்றனர்.
கட்டுக்கரைக்குளத்தின் கீழ் விவசாயம் மேற்கொள்ளப்படும் 31 ஆயிரம் ஏக்கரில் நெற்செய்கை பண்ணப்பட வேண்டிய காலம் இது.
தற்போது பெய்துவரும் மழையின் காரணமாக மன்னார் மாவட்டத்தின் பிரதான குளமாகிய கட்டுக்கரைக்குளத்தில் 9 அடிக்கு மேல் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. விவசாயத்துக்கு ஏற்றவாறு மழையும் பெய்தவண்ணம் காணப்படுகின்றது. ஆனால் மன்னார் விவசாயிகள் நெற்செய்கை ஆர்வமற்றுள்ளனர். உரம் மற்றும் களைநாசினி இல்லாத காரணத்தால் விவசாயிகள் நெற்செய்கை மேற்கொள்வதில் தயக்கம் காட்டி வருகின்றனர்.
கடந்த வருடங்களில் இந்தக் காலப் பகுதியில் ஐம்பது வீதத்துக்கு மேற்பட்ட காணிகள் நெற்செய்கைக்காகப் பண்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் தற்போது ஐந்து வீதத்துக்குக் குறைவான விவசாய நிலங்களே பண்படுத்தப்பட்டுள்ளன. ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தில் புழுதி வேளாண்மை செய்யப்பட்டுள்ளது. புழுதி விவசாயத்துக்கு உரம் இடுவதற்கான பசளை இல்லாத நிலைமையும், களையைக் கட்டுப்படுத்துவதற்கான களைநாசினி அற்ற நிலையும் இங்கு காணப்படுகின்றது.
இதன் காரணமாக மன்னாரில் புழுதி வேளாண்மை பாதிப்பு அடையும் நிலைமையில் உள்ளது. அத்துடன் காலபோக நெற்செய்கையை விவசாயிகள் கைவிடும் அபாயம் உள்ளது. இதனால் மாவட்டத்தில் பஞ்சம் ஏற்படும் நிலைமையும் உருவாகும்- என்றார் (ஒ-460)






# விழிப்புணர்வு செயற்றிட்டம்

வவுனியா, ஒக் 30
கொரோனாத் தொற்றை எதிர்கொள்ளும் நோக்கில் 'இளைஞர்கள் மகிழ்வாய் இருங்கள்' எனும் கருப்பொருளில் செயற்றிட்ட நிகழ்வு ஒன்று வவுனியா மாவட்ட செயலகத்தில் பொது மக்கள், விளையாட்டு அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.
இந்த நிகழ்வில், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர், பணிப்பாளர் நாயகம் மற்றும் பலர் கலந்துகொண்டிருந்தனர். (ய-110)

சைக்கிள்களுக்கு

# ஸ்டிக்கர் ஒட்டும் பணிகள் மானிப்பாயில் முன்னெடுப்பு

மானிப்பாய்,ஒக்.30
சைக்கிள்களுக்கு இரவு நேர சமிக்ஞை ஸ்டிக்கர்கள் ஒட்டும் பணிகள் மானிப்பாய் பகுதியில் கடந்த புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டன.
மானிப்பாய் பகுதியில் அண்மைக்காலமாக சைக்கிள்கள் விபத்துக்குள்ளாகும் சம்பவங்கள் அதிகரித்த நிலையில், மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தின் போக்குவரத்து பிரிவின் வழிகாட்டலில் மானிப்பாய் போக்குவரத்து பொலிஸாரால் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட் டது. இரவு நேர பயணத்தின் போது பின்னிருந்து வரும் வாகனங்களுக்கு துவிச்சக்கர வண்டியை அடையாளப்படுத்தும் நோக்கில் இந்த ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன.
ஸ்டிக்கரில் "பொலிஸ் உங்கள் நண்பன்"எனும் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. (ஜ-125)



# குழந்தைபேறுக்கான பொருள்கள் வழங்கல்

மன்னார், ஒக். 30
பொருண்மியம் நலிவடைந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு குழந்தைப் பேறுக்குரிய பொருள்கள் மன்னார் றட்டரிக் கழகத்தினரால் கடந்த புதன்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.
10 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ. 70 ஆயிரம் பெறுமதியான பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ய-213)

# உடைமையில் கசிப்பு சந்தேகநபர் கைது



மானிப்பாய்,ஒக்.30
சட்டவிரோத கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மானிப்பாய் பகுதியில் வைத்து கடந்த புதன்கிழமை இரவு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம் பெற்று வருவதாக மானிப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.
அவரிடமிருந்து 4 ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது. சந்தேகநபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஜ-125)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பயணங்களால் நன்மை ஏற்படும். மனதில் பரபரப்பு கூடும். நீண்ட நாளாக தாமதம் ஏற்பட்டுக் கொண்டிருந்த பண வரவு கிடைக்கும். வியாபாரிகள் முன்னேற்றமான நிலையை அடைவீர்கள்.

**இடபம்:** பணியிடத்தில் கவனமாக இருந்து பிரச்சினையில் இருந்து தப்புவீர்கள். நெருக்கமற்றவர்களிடம் உங்களது மனக்குறைகளை சொல்ல வேண்டாம்.

**மிதுனம்:** மனதுக்கு இனிய அன்பர்களுக்கு உதவி செய்வீர்கள். கலைத்துறையினருக்கு வெற்றியும், விருதும் கிடைக்கும். பிறரது மனங்களை வெல்வீர்கள்.

**கடகம்:** சகோதரர்களால் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** மனதுக்கு நெருக்கமானவர் செய்யும் நல்ல செயல் உங்களை மகிழ்விக்கும். சிறு உடல் உபாதைகளால் கவலை கொள்ளாதீர்கள். வெளிநாடு செல்லும் யோகம் எதிர்பார்த்தபடி கைகூடும்.

**கன்னி:** பொறுமை காரணமாக நல்ல விஷயம் ஒன்றை அடைவீர்கள். புதிய திட்டங்களில் தடைகள், தாமதங்கள் ஏற்படலாம். பணியிடத்தில் ஏற்பட்ட சில இடையூறுகள் விலகும்.

**துலாம்:** நண்பர்களுக்கு சில நன்மைகளை செய்து மகிழ்வீர்கள். தியாகம் செய்யும் மனப்பான்மை காரணமாக வெல்வீர்கள். சிறு மனமாற்றம் ஏற்படும். உடல் நிலை சரியாகும்.

**விருச்சிகம்:** போட்டியில் வெல்வீர்கள். பேச்சில் கவனமாக இருக்க வேண்டும். கூடுதலாக உழைத்து வெற்றி பெறக்கூடிய நாள். வெளிநாடு செல்ல வாய்ப்புகள் கிடைக்கும். சிறு சலசலப்பை சமாளிப்பீர்கள்.

**தனுசு:** பணியிடமாற்றம் குறித்து இப்போதைக்கு எந்த முயற்சியும் எடுக்க வேண்டாம். குழந்தைகளின் செயற்பாடுகள் உங்களுக்கு மகிழ்ச்சியை கொடுக்கும்.

**மகரம்:** நிதி நிலையில் இருந்த தேக்க நிலை மாறும். கவனமாகப் பேசவும். பிறருடன் இருந்த கருத்து வேறுபாடுகள் குறையும். சுபச்செய்தி வரும். குழந்தைப் பாக்கியத்துக்காக காத்திருப்போருக்கு நல்ல செய்தி உண்டு.

**கும்பம்:** நண்பர்கள் இடையே பரஸ்பர உதவி செய்து கொள்வீர்கள். உங்களின் முயற்சி காரணமாக குடும்பத்தில் சுமூக நிலை காணப்படும். இளைஞர்கள் தங்களின் செயற்பாட்டில் கவனமாக இருக்க வேண்டும்.

**மீனம்:** விருந்து, விசேஷங்களுக்கு செல்வீர்கள். குதூகலம் அதிகரிக்கும். மனக்குழப்பத்தால் முக்கிய முடிவுகள் எடுப்பதில் தடுமாறுவீர்கள். பணங்களை தவிர்க்கவும். வாகன மாற்றம் செய்வீர்கள்.

## வேலையாள்கள் தேவை

வர்த்தக நிலையத்திற்கு வேலையாள்கள் தேவை.

**077 776 3533**

(CS 17888) (1/6)

## மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 05 . 1948



மறைவு
29 . 10 . 2021

### சிவகுரு அன்னலிங்கம்

**(ஓய்வுபெற்ற ஊழியர் யாழ் பல்கலைக்கழகம்)**

கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு அன்னலிங்கம் நேற்று (29.10.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், பொன்னுத்துரை-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும், இளஞ்செழியன், அமரர் செல்வக்குமரன் மற்றும் யசிந்தன் (சுவீடன்) பிங்களன், அகிலன், மாயவன், கௌசிகா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.10.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல.44, 3ம் குறுக்குத்தெருவில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 17887) 1/6

*சிங்கள...*

கூடிய தமிழ்த் தேசியக்கட்சிகள் மற்றும் சில அரசியல் கட்சிகள் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

கலந்துரையாடலின் பின்னர் சிவசக்தி ஆனந்தன் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா வடக்கு பிரதேச செயலகப்பிரிவினுள்ளே அரசாங்கம் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்களை குடியேற்றுவதற்கான ஆரம்ப வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

ஏற்கனவே திட்டமிட்டு குடியேற்றப்பட்ட நாமல்கம மற்றும் பொகஸ்வெள கிராமத்தை சேர்ந்த சிங்கள மக்கள் நிர்வாக ரீதியாக அநுராதபுரத்துக்குச்சென்று தமது கடமைகளைச் செய்யமுடியாத காரணத்தால் இவ்வாறான கோரிக்கையை முன்வைத்தனர் என்றும், அதனால் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் தம்மை உள்வாங்குமாறு கேட்டுக்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த வேலைத்திட்டமானது ஜனாதிபதி வவுனியாவுக்கு வருகை தந்தபோது ஜனாதிபதியின் உத்தரவின்பேரில் மேற்கொள்ளப்படுகின்றது என்றும் இதுவரையில் 300க்கும் மேற்பட்ட தென்பகுதியைச் சேர்ந்த சிங்களக் குடும்பங்கள் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தினுள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் மேலதிகமாக ஆயிரத்து 500க்கும் மேற்பட்டவர்களை குடியேற்றம் செய்யவுள்ளமையால், இந்தச் செயற்பாடானது இன விகிதாசாரத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

நெடுங்கேணி பிரதேசசபை பறிபோகும் ஆபத்தும் உள்ளது. வவுனியா வடக்கு பிரதேச செயலாளராகக் கூட பெரும்பான்மை இனத்தவரை கொண்டுவர உள்ளார்கள்.

ஏற்கனவே இந்த அரசாங்கம் மகாவலி எல் வலயத்தின் ஊடாக மாமடுவில் இருந்து கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் கருநாட்டுக்கேணி வரை திட்டமிட்டு குடியேற்றத்தை விஸ்தரிப்பு செய்வதனால் வடக்கு மாகாணத்தில் இன விகிதாசாரத்தில் பெரும் மாற்றம் ஏற்படும்.

எனவே, இந்த விடயங்களை முன்னிலைப்படுத்தி எதிர்வரும் வாரம் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்தவுள்ளோம்.

இரசாயன உரத்தை அரசாங்கம் உடனடியாக வழங்க வேண்டும். அதிபர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்கவேண்டும். மாகாணசபைக்குரிய அதிகாரங்களையும் மத்திய அரசாங்கம் சுவீகரிக்கவுள்ளது - என்று அவர் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் தமிழரசுக்கட்சியின் செயலாளர் ப. சத்தியலிங்கம், வவுனியா மாவட்ட அமைப்பாளர் ந. கருணாநிதி மற்றும் சிவசோதி, தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் சார்பில் நகரசபை உறுப்பினர்களான எஸ்.சந்திரகுலசிங்கம், சு.காண்டீபன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், நகரசபைத் தலைவர் இ.கௌதமன், கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் கே. அருந்தவராசா, ரெலோ சார்பில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன், பிரதேச சபை உறுப்பினர் எஸ்.சந்திரபத்மன், மாக்ஸிஸ லெனினிச கட்சி சார்பில் பிரதீபன், ஜனநாயகப் போராளிகள் கட்சி சார்பில் அந்தக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் துளசி ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (த-110)

# மரண அறிவித்தல்

## திருமதி இராசரத்தினம் தங்கரத்தினம்



**தோற்றம் : 30.04.1940** **மறைவு : 27.10.2021**

யாழ்ப்பாணம் உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் இராசரத்தினம் அவர்கள் 27.10.2021 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகாலிங்கம் அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், அருணாசலம் அழகம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற அருணாசலம் இராசரத்தினம் அவர்களின் ஆருயிர் மனைவியும், காலஞ்சென்ற லோகராசா, ஏகநாயகி (இலங்கை), சிறீஸ்கந்தராஜா (இலங்கை), புவனேஸ்வரராஜா(ராஜா - சுவிஸ்), மேகலாதேவி (ஜேர்மனி), அருணகிரிநாதன் (லண்டன்), அருந்தவராணி (பிரான்ஸ்), பாலராசா (லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும், சொர்ணலிங்கம், கமலேஸ்வரி, செல்வமதி, இரத்தினராசா, சோபனா, கோடீஸ்வரன், சிவதர்சினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், லேகலதீபன், கஜேந்தினி, நந்ததீபன், ஜீவதீபன், கிரிசாந்தினி, அஜந்தினி, தர்சலா, பிரதீபா, சயந்தன், இந்துஜா, மௌனிகா, கிருஸ்னிகா, சுபானுஜா, பிரவீனா, சுஜீபன், தக்சனா, டிபிசன், கபிசன், கிரேசியன், சகீரன், கிசானி ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும், துவாரகா, கவின், கிருஜன், அஸ்வித், சோபியா, அவினேஸ், அமீரா, சல்டினா ஆ யோரின் பாசமிகு பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உடுப்பிட்டியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நாளை (31.10.2021) ஞாயிற்றுக்கிழமை 10.00 மணியளவில் இடம்பெற்று வல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொ'ள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**077 187 7076**
**0777 206803**

தகவல்:
**பிள்ளைகள்**

(CR 5495)(1/6)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி சந்திக்கு அருகில் 5 ½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு 077 668 1670 (CR 35492) (3.6)

## சிறுநீரகம் தேவை

0 + குறுப் வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

074 095 1954 (cs 40813) (2.6)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம்
வயது 38, நட்சத்திரம் - பூராடம், கல்வி அறிவு குறைந்த மணமகனுக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்கின்றனர்.
மணமகனுக்கு லண்டன் மற்றும் இலங்கை வாழ் இரட்டை பிரஜா உரிமையுண்டு. மணமகனுக்கு தேவையான பொருளாதார வசதியுண்டு.

விளம்பர இல.: J/F 1031
மே/பா உதயன் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (cs 40816) (2.6)

## மணமகன் தேவை

1992 இல் அனுச நட்சத்திரம், விருச்சிகராசியில் பிறந்த தொழிநுட்பக் கல்லூரி கணக்காளராக தொழில் புரியும் மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை.
அரச உத்தியோகம் அல்லது வெளிநாடு விரும்பத்தக்கது

076 688 5871 (cs 40824) (2.6)

## வேலைக்கு ஆள் தேவை

யாழ் நகரில் Kabris Fastfood Restaurant ஒன்றிற்கு காசாளர் தேவை. (அனுபவம் மற்றும் வயதிற்கேற்ப சம்பளம் தீர்மானிக்கப் படும்)
உணவு தங்குமிட வசதி செய்து தரப்படும்.

தொடர்பு :
077 34 38 373, 070 123 3107
kabrisjaffna@gmail.com


## வேலையாட்கள் தேவை

நன்றாக தைக்கத் தெரிந்த பெண்கள் தேவை.
(20 - 40 வயதிற்குட்பட்டவர்கள்)

**சில்வர் பலேஸ்**
இல.11, ஜும்மா மொஸ்லேன்,
செம்மா தெரு, யாழ்ப்பாணம்.
(CS 40766) (3.6) 071 511 3801

## மரண அறிவித்தல்

மலர்வு 09 . 02 . 1952



உதிர்வு 27 . 10 . 2021


### அமரர் கந்தசாமி செங்கைவேல் (செந்தில்வேல்)

நீராவியடியைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தி, கொக்குவிலை வசிப்பிட மாகவும் கொண்ட கந்தசாமி செங்கைவேல் அவர்கள் கடந்த (27.10. 2021) அன்று ஜேர்மனியில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - பூமணி தம்பதியரின் அன்பு மகனும், சோமாவதியின் அன்புக் கணவரும், நிஷாந்தனின் அன்புத் தந்தையும், அருள்வேல், வீரலோஜினி, பத்மலோஜினி, சக்திவேல், கதிர்வேல், சந்திரகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.11.2021 திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
சகோதரர்கள் (கோண்டாவில்)
(CS 17886) 1/6

## மரண அறிவித்தல்

பிறப்பு 21 . 11 . 1924



இறப்பு 29 . 10 . 2021

### சிவஞானம் பாக்கியலட்சுமி

கலட்டி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் பாக்கியலட்சுமி நேற்று (29.10.2021) வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சிவஞானம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2021) சனிக் கிழமை மு.ப.10.00 மணியளவில் White House மலர்சாலை பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
திருமதி அன்னபாக்கியம் - சகோதரி
திருமதி ஜேனி - பெறாமகள்
(Cs 17883) (3.6)

## கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு

சாவகச்சேரி கண்டி வீதியில் 123 இலக்க பழைய பிள்ளையார் ஸ்ரோர்ஸ் (மக்கள் வங்கிக்கு அருகாமையில்) அமைந்துள்ள கடைத் தொகுதி நான்கு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள், வங்கிகள், அலுவலகங்கள் விரும்பத்தக்கது. (சகல வசதிகளும் உண்டு)
முற்பணம் வாடகை பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு தங்கன் - 077 693 3255 (CR 35483)(3.6)

## CHUDIKULI GIRLS' COLLEGE JAFFNA.

### New Admissions - 2022


### English Medium Nursery

- For 3 + classess (Girls only)
- Only limited vacancies
  Age : Born on or after 01.02.2018 and before 31.01.2019
- Applications close on 20th November 2021.
- Application forms (limited number) will be available at the College office from 1st November 2021.
- Interviews will be held soon after the submission of the applications .

(CR 35481)(3.6) **Principal**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 26 . 02 . 1942



இறப்பு 30 . 09 . 2021

### அமரர் நடராசா புவனேந்திராசா

நெஞ்சம் கனக்குது விழிநீர் சொரியுது
உம் நினைவுகள் நெஞ்சில் ஊஞ்சல் ஆடுது அப்பா !!!
வஞ்சமில்லா உம்மன்புடன் பழகிய
உங்கள் நினைவுகள் எல்லாம்
நெஞ்சை உருக்குது அப்பா!!!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

305, ஆ.வ.வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்
cs 40823 (2.6)

## அமைச்சு பதவிக்காக மனசாட்சியை அடகு வைக்கமுடியாது!

கொழும்பு, ஒக். 30
"தவறை யார் செய்தாலும் அது தவறுதான். அதனை தைரியமாக சுட்டிக் காட்டுவோம். அமைச்சு பதவிக்காக மனசாட்சியை அடகுவைக்கமுடியாது." என்று அமைச்சர் விமல்வீரவன்ச தெரிவித்தார்.
கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் 40 வீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நேற்று நடைபெற்ற 'மக்கள் சபை'க் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,
"கொரோனா நிலைமையால் கடந்த காலங்களில் 'ஒன்லைன்' ஊடாகவே அமைச்சரவைக் கூட்டங்கள் நடைபெற்றன. வழமையாக நேரடியாக அமைச்சரவைக் கூட்டம் நடைபெறும் போது, அமைச்சரவை பத்திரம் தொடர்பில் மேலதிக தவல்கள் தேவையெனில் ஆய்வுக்காக கால அவகாசம் வழங்கப்படும். அமைச்சரவை பத்திரம் பற்றி அமைச்சரவை செயலாளர் தெளிவுபடுத்துவார்.
எரிவாயு விநியோகத்தின் நிறைவேற்று அதிகாரத்தை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பான அமைச்சரவை பத்திரம் திருட்டுத்தனமாகவே கொண்டுவரப்பட்டது. அது தொடர்பில் விளக்கமளிக்கப்படவில்லை. இது தொடர்பில் நீதிமன்றத்தில் கூட கருத்து வெளியிடுவதற்கு நான் தயார்.
அமைச்சு பதவிக்காக பொறுமைகாத்து, மனசாட்சியை அடகுவைத்து அரசியல் நடத்தும் கலாசாரம் எம்மிடம் எடுபடாது. மக்கள் வழங்கிய ஆணையை பாதுகாப்போம். அதற்காகப் போராடுவோம்."- என்றார்.
(த-44)

# 74 ஆவது அகவை நாளில்

இதயத்தால் இறைஞ்சுகின்றோம்

அமரர் திருமதி சறோஜா ஈஸ்வரதாசன்



அன்னை மடியில் 30.10.1947

ஆண்டவன் அடியில் 11.02.2018

எழுகதிராய் எமக்கெல்லாம் ஏற்றம் தந்த தெய்வத்தை எழுபத்து நான்கு அகவைதனில் இதயத்தால் இறைஞ்சுகின்றோம்.

180/2, சேர் பொன். இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(cs 17875) (02.6)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த (05.10.2021) செவ்வாய்க்கிழமை அன்று சிவபாதமடைந்த எமது குடும்ப ஒளி விளக்கு

## அமரர் சின்னத்தம்பி யோகேந்திரம் (யோகராசா)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் எதிர்வரும் (02.11.2021) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் (04.11.2021) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

161 ஆம் கட்டை, உமையாள்புரம்,
பரந்தன்.

குடும்பத்தினர்

(CS 1102)(3.6)

# ஓராண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 13.02.1943

இறைவன் அடியில் 10.11.2020

## அமரர் செல்லையா செல்வரத்தினம்

(முன்னாள் மின்பொறுப்புனர் - பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை,
முன்னாள், பிரபல வர்த்தகர் கிளிநொச்சி)

திதி : 30.10.2021

குடும்ப ஒளிவிளக்காய் சமூகத் தொண்டராய் வாழ்ந்த
எங்கள் குலவிளக்கு அணைந்து பன்னிரு திங்கள்
கடந்து போனதுவே! மனம் ஏற்க மறுக்கிறதே!
இறுதிவரை உங்கள் நினைவு சுமந்து பயணிப்போம்.
எம் அன்புத் திருவுருவின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

குடும்பத்தினர்

(CS 1101)(3.6)

# மரண அறிவித்தல்



## திரு.அப்பையா சீவரத்தினம்

(புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி உறுப்பினர்,
ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்)

அப்பையா வீதி, கேணியடி, கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும், பொன்னையா வீதி ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா சீவரத்தினம் அவர்கள் கடந்த 25.10.2021 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், துஸ்யந்தனின் (London) அன்புத் தந்தையும், சுஜிகலாவின் அன்பு மாமனும், தீரனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.10.2021) ஞாயிற்றுக்கிழமை இன்பம் அந்தியகால சேவை மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

0044 791 364 2157
077 061 1416

தகவல்:
சீ.துஸ்யந்தன் (மகன்)

(cs 40820) (2.6)

# கரைதுறைப்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், முல்லைத்தீவு (வ/து)

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் கீழ்வரும் பதவிகளிற்கு தகுதியுள்ள விண்ணப்பதாரிக்ளிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பதவி :- களஞ்சியப் பொறுப்பாளர்**

சம்பளக் குறியீட்டு இல :- 202/12

சம்பள அளவுத்திட்டம் :- 16780-150X10-165X10-19930வும், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு வின் சுற்று நிருபத்திற்கு அமைய இதர படிகளும், காலத்திற்குக்காலம் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும் (04/2018ன்படி)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

அ) கூட்டுறவுப் பணியாளர் 13வது சம்பளத்திட்ட களஞ்சியப்பொறுப்பாளர் அல்லது கொள்வனவு உத்தியோகத்தர் அல்லது சில்லறைக் களஞ்சிய மேற்பார்வையாளர் அல்லது சில்லறைக் களஞ்சிய முகாமையாளர் பதவியொன்றில் (02) இரண்டு வருடங்களிற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 14வது சம்பளத்திட்ட அப்படிப்பட்ட பதவியொன்றில் (04) நான்கு வருடங்களிற்கு குறையாத அனுபவம்

**அல்லது**

ஆ) கூட்டுறவுப்பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தி

**அல்லது**

இ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரணதரம்) எண்கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் களஞ்சியப் பொறுப்பாளர் பதவியொன்றில் 04 வருடங்களிற்கு குறையாத அனுபவம்

**02. பதவி :- களஞ்சிய முகாமையாளர்**

சம்பளக் குறியீட்டு இல:- 208/13

சம்பளஅளவுத்திட்டம்:- 16365-140X10-150x10-19265 வும், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு வின் சுற்று நிருபத்திற்கு அமைய இதர படிகளும், காலத்திற்குக் காலம் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும் (04/2018ன்படி)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

அ) கூட்டுறவுப்பணியாளர் 14வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் (02) இரண்டு வருடங்களிற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் (04) நான்கு வருடங்களிற்கு குறையாத அனுபவம்

**அல்லது**

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண் கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 04 பாடங் களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் தொடர்பு பட்டதுறைப் பதவியொன்றில் 02 வருடங்களிற்கு குறையாத அனுபவம்.


**ஏனைய விபரம்:-**

1. வயது எல்லை – 18-45 வரை (தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளோருக்கு வயது எல்லை கருத்தில்கொள்ளப்படமாட்டாது)
2. சங்க எல்லைப்பரப்பில் நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்
3. மேற்படி பதவிக்கு தெரிவு செய்யப்படுபவர் சங்கத்தால் கோரப்படும் ரொக்கப்பிணை, ஆதனப்பிணை என்பன செலுத்துதல் வேண்டும்.
4. மேற்படி பதவிக்கான விண்ணப்பப்படிவத்தினை சுயமாகதயாரித்து பூரணப்படுத்தி கடித உறையிலிட்டு அக்கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை குறிப்பிட்டு **தலைவர், கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம், முல்லைத்தீவு** என்ற முகவரிக்கு 18.11.2021ம் திகதிக்கு அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

தலைவர்
கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம்
முல்லைத்தீவு.

(CR 35497) 01/06

# மரண அறிவித்தல்



## நாகராசா சுவிகரன் (சுவி)

(கணநாதா பான்சி உரிமையாளர் - நவீன சந்தை, யாழ்ப்பாணம்)

வேலணை மேற்கு, முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா சுவிகரன் கடந்த (27.10.2021) புதன்கிழமை மாலை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா - கமலாம்பிகை தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், சிவமலர், சிவகரன், ஞானகரன், வனஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வரதராசன் மற்றும் ராஜினி, வனிதா, மணிவண்ணன் ஆகியோரின் மைத்துனனும், கபீசன், வைஷ்ணவி, அட்சயா ஆகியோரின் பாசமிகு தாய் மாமனும், சுவிதா, சுரேக்கா, இந்துஜா, ஆதவன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.10.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேலணை மேற்கு அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முடிப்பிள்ள்ளயார் கோயிலடி,
வேலணை மேற்கு,
வேலணை - 08

(cs 40821) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்
077 541 1960

---

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
### கலைப்பீடம்
### அரையாண்டுப் பரீட்சைகள் (பழையபாடத்திட்டம்)

**பழைய பாடத்திற்குரிய பின்வரும் பரீட்சைகள் விரைவில் நடைபெறவுள்ளன.**
**முதலாம் வருடம் முதலாம் மற்றும் இரண்டாம் அரையாண்டு**
**இரண்டாம் வருடம் முதலாம் அரையாண்டு**

மேற்படி பரீட்சைகளில் தோற்றவேண்டிய மீள்பரீட்சார்த்திகள் 10.11.2021 அன்று அல்லது முன்னராக கலைப் பீடபீடாதிபதி அலுவலகத்திற்கு வருகைதந்து உரிய விண்ணப்பங்களை பூர்த்தி செய்து பரீட்சைக் கட்டணமாக ரூபா 250/- (ஒரு பாடத்திற்கு) மக்கள் வங்கிக் கிளையில் 480000022100084 என்ற கணக்கு இலக்கத்திற்கு செலுத்திய பற்றுச்சீட்டுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.


ஏற்கனவே இணைய வழியினூடாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தோர் பரீட்சைக் கட்டணத்தை மட்டும் செலுத்திய பற்றுச் சீட்டினை சமர்ப்பித்தால் போதுமானது.

(cr 35801 (2.6) பதிவாளர்

---

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி சிற்றம்பலம்



அராலி மேற்கு, கோட்டைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட சின்னத்தம்பி சிற்றம்பலம் நேற்றுமுன்தினம் (28.10.2021) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.10.2021) ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தோற்றம் 23.02.1943 மறைவு 28.10.2021

(cs 40819) (2.6)


தகவல்:
குடும்பத்தினர்
077 128 5584

---

# பிறந்த நாள் நினைவலைகள்

## அமரர் கோபாலபிள்ளை குகன்

(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - அதி சிறப்புத் தரம்)



அன்னை மடியகன்று ஆண்டுகள் மூன்று ஆனதுவோ!
அழகிய உன் கூடு ஒளி இழந்து தவிக்கிறதே - நீ
சரித்திரம் படைத்திட இம்மண்ணிலே
அவதரித்த பொன் நாள் இன்றல்லவா!
புன்னகை தவழும் கார்த்திகைத் தீபமே - நீ
மின்மினி போல் கண் சிமிட்டி எங்கு மறைந்தாயோ!

நீ நடந்து வரும் பாதைதனில்
புற்கள் கூட மடியாதே - உன்னைச்
சுமந்து சென்று விரைந்து போய்
விபத்து என விதி முடித்தானே
விண்ணிலிருந்து கண்திறந்து பாரடா - பூநகரி
மண்ணிலே உந்தன் உதிரம் உறையும்
முன்னே நடந்த கதை கூறடா? நீதி கேளடா?

காற்றிலே கலந்து வந்த சேதி
நேற்றுப் போல் உள்ளதடா - உன்
கனவுகள் சிதைந்த அந்தக் கொடிய
நாள் பொய்யாகிப் போகாதோ!
கருவிழி மூடி நீள் துயில் கொண்டவனே! தினமும்
கலங்குகிறது உன்னைத் தேடும் எம் விழிகள்

(CS 40826)(3.6)

மலர்வு 30.10.1985
உதிர்வு 18.05.2018

கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.

என்றும் ஆறாத்துயரில்
குடும்பத்தினர்
(வேலணை மேற்கு - 8)

## பூர்த்தி...

இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் நேற்று நேரில் தெரிவித்தார்.

இலங்கையில் மாகாணசபைத் தேர்தலை அரசு இனியும் ஒத்திவைக்க முடியாது எனவும், இது தொடர்பில் இந்தியாவின் அழுத்தம் தொடர்ந்து இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை – இந்திய மீனவர்கள் பிரச்சினைக்கு வன்முறை வழியில் தீர்வு காணமுடியாது எனவும், இரு நாட்டு உறவுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் இலங்கை அரசிடம் நாம் வலியுறுத்தியுள்ளோம் எனவும் அவர் கூறினார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு, சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இதன்போதே இந்தியத் தூதுவர் மேற்கண்டவாறு கூறினார்.

சந்திப்பின் ஆரம்பத்தில் சம்பந்தனுக்குத் தங்களுடைய தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்த இந்தியத் தூதுவர், பல முக்கியமான விடயங்கள் குறித்து சம்பந்தனுடன் உரையாடினார்.

இலங்கைக்கான புதிய அரசமைப்பு, இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை என்பவை தொடர்பில் இதன்போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

வடக்கு, கிழக்கில் இந்திய முதலீடுகள், உதவித் திட்டங்கள் பற்றியும் இதன்போது பேசப்பட்டன.

மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவோடு இந்தியத் தூதுவர் சந்திப்பதற்கும் இணக்கம் காணப்பட்டது. (த-22)

## தொற்று...

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 39 ஆயிரத்து 416 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 302 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 12 ஆயிரத்து 165 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை,

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 10 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 3 பெண்களும், 7 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதன்படி நாட்டில் பதிவான கொரோனா உயிரிழப்புகளின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 706 ஆக உயர்வடைந்துள்ளது. (த-22)

## யாழ். ...

னம்) கிடைத்த பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 63 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாண மாவட்ட செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

மாவட்ட செயலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்டத்தில் இன்றுவரை 17 ஆயிரத்து 664 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இன்றுவரை 452 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தோரின் எண்ணிக்கை கணிசமாக உயர்வடைந்து 17 ஆயிரத்து 500 ஆகக் காணப்படுகின்றது.

மாவட்டம் தற்பொழுது இயல்பு நிலைமைக்குத் திரும்பியுள்ளது. மேலும் படிப்படியாக சுமுக நிலைமைக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றது.

தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் ஏனைய வழிபாட்டு தலங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே மக்கள் சற்று அவதானமாக தொடர்ந்தும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிச் செயற்படுவது அவசியமாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டபோது மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து காணப்பட்டது. எனினும், தற்போது அதிகரித்துள்ளது.

பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப்பேணி கட்டுப்பாடுகளுடன் தமது அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

இதேவேளை,

யாழ்ப்பாண மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடின்றி கிடைப்பதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்தார். (த-26)

## தென்மராட்சியில்...

நுணாவில் பகுதியைச் சேர்ந்த 83 வயது மூதாட்டி யாழ்.போதனா மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார். கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியிருந்த முதியவர் ஒருவரும் தொற்றால் உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்துள்ளவர்களுடன் சேர்த்து, தென்மராட்சியில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 38ஆக உயர்ந்துள்ளது. (த-9)

## மாகாணத் தடை....

டுகளை, நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணிக்கு நீக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக நேற்று நடைபெற்ற கொரோனாத் தொற்றொழிப்புச் செயலணிக் கூட்டத்தின்போது, ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

புதிய பொதுமைப்படுத்தலின் கீழ், பொதுமக்களின் வாழ்க்கை முறைமை பாதிக்காத வகையில் முன்னெடுக்கப்படவேண்டுமென்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (த)

## தடுப்பூசி...

கள் அதிகளவில் நடமாடும் இடங்களுக்குச் செல்லும்போது, தடுப்பூசி அட்டையைக் கட்டாயம் எடுத்துச் செல்வதற்கான இயலுமை தொடர்பில் உடன் கண்டறிவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக நேற்று நடைபெற்ற கொரோனா தொற்றொழிப்புச் செயலணிக் கூட்டத்தின் போதே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாத நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க, கொரோனா சட்டதிட்டங்களில் வாய்ப்பளிக்கப்பட்டு உள்ளதென்று சுட்டிக்காட்டிய சுகாதார அதிகாரிகள், இது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

அத்துடன், பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மக்களுக்கான தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்துக்கு நடமாடும் சேவையை முன்னெடுக்குமாறும் அனைத்து மக்களும் தடுப்பூசி ஏற்றிக் கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்குமாறும், ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

இதற்காக, பொதுச் சுகாதார அதிகாரிகள், கிராம சேவையாளர்கள் மற்றும் பிராந்திய அரசியல்வாதிகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கினார்.

கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக, பாடசாலை மாணவர்களின் கல்வி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதால், அது தொடர்பில் அவதானம் செலுத்தி, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் உயர்தரங்களுக்கான பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான சுகாதாரப் பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று இதன்போது தெரிவிக்கப்பட்டது. இதுதொடர்பில், பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தி, கல்வி நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு, ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன், பல்கலைக்கழக முதலாமாண்டு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் விரைவில் ஆராயுமாறும், சுகாதார மற்றும் கல்வி அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார். (த)

## கொரோனா...

கொரோனாவின் ஆபத்து இன்னமும் குறையவில்லை. எனவே, மக்கள் அனைவரும் புதிய சுகாதார விதிமுறைகளுக்கமைய மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்."

இவ்வாறு, இராஜாங்க அமைச்சரான விசேட மருத்துவ நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாட்டில் நாளாந்தம் அடையாளம் காணப்படும் கொரோனா நோயாளர்கள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டாலும், ஆபத்து இன்னமும் குறையவில்லை.

டெல்டா பிளஸ் பிறழ்வு நாட்டுக்குள் நுழையும் அபாயமுள்ளது.

ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளில் தடுப்பூசித் திட்டம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டபோதும், டெல்டா பிளஸ் பிறழ்வால் ஆபத்து மீண்டும் அதிகரித்துள்ளது.

இலங்கையும் அத்தகைய ஆபத்திலேயே உள்ளது" என்றார். (த-22)

## இராணுவ..

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு பதிவாகியுள்ளது.

சம்பவத்தில், வேணாவில் புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த மாரிமுத்து பவிசாந் (வயது - 21) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

அங்கு மின்சாரம் தடைபட்டிருந்த நிலையில் விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த அந்த இளைஞன் மீட்கப்பட்டு புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்து தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (த-19)

## சிங்கள...

பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட அந்தக்கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் வவுனியாவில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, பழைய பேருந்து நிலையத்தை சூழவுள்ள வர்த்தக நிலையங்களுக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட குழுவினர் சிங்கள குடியேற்றங்கள் மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் உள்ளடக்கிய துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில், "அடங்க மறுப்பது எம் இனத்தின் குணம், எமது நிலத்தில் எம்மை நிம்மதியாக வாழ விடு, சீண்டாதே சீண்டாதே தமிழர்களை சீண்டாதே, இலங்கை அரசை குற்றவியல் நீதிமன்றத்தில் உடனடியாக பாரப்படுத்து, மீண்டுமொரு இனவழிப்பு அரங்கேற்றமா?, தமிழர் தாயகத்து நிலங்களை அபகரிப்பதை நிறுத்து" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாங்கியிருந்தனர். அரசுக்கு எதிராகக் கோஷங்களையும் எழுப்பினர். (த-110)

## கறுப்புப்..

அலுவலகத்தால், இலங்கை மக்கள் வங்கி கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை,

இந்த விடயம் தொடர்பில் மக்கள் வங்கி செய்திக்குறிப்பு ஒன்றினூடாக தெளிவுபடுத்தல் ஒன்றை விடுத்துள்ளது.

அதில்,

இலங்கையிலுள்ள சீன மக்கள் குடியரசின் தூதரகத்தின் பொருளாதார மற்றும் வணிக ஆலோசகர், சீனவால் வழங்கப்பட்ட நாணயக் கடிதத்துக்கு பணம் செலுத்தாததற்காகவே மக்கள் வங்கியை கறுப்புப் பட்டியலில் சேர்த்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

வர்த்தகப் பரிவர்த்தனை தொடர்பாக இலங்கையின் வர்த்தக உயர் நீதிமன்றங்கள் பிறப்பித்துள்ள தடை உத்தரவுக்கு வங்கி கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக சீனத் தூதரகத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மக்கள் வங்கி ஏற்கனவே தெரிவித்துள்ளது.

நடைமுறையிலுள்ள சட்டத் தடைகள் நீக்கப்பட்டவுடன் வழக்கமான வர்த்தக நடவடிக்கையின்படி நாணயக் கடிதக் கட்டணம் உடனடியாக வழங்கப்படும் என்று மக்கள் வங்கி குறிப்பிட்டுள்ளது. (த-இ)

## மழையால்..


பத்தினரின் வீடு முற்றுமுழுதாக சேதமடைந்துள்ளது என்று யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் என்.சூரியராஜ் தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/141, ஜே/142 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளிலேயே மழையுடன் கூடிய காலநிலையால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டோரின் விவரங்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஊடாகப்பெற்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனினும், குறித்த காலநிலையானது மறு அறிவித்தல் வரை தொடரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று உதவிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (த-20)

# புத்தகம் என்பது....!



வற்றிவேல் சக்திவேல்

இருபத்தியொராம் நூற்றாண்டிலே அவசரமான தகவல் யுகத்திலே வாழ்கின்ற மக்களிடையே ஒரு சிறு பகுதியினர் நுண்மதியர்களாகவும் புலமையாளர்களாகவும் கல்விமான்களாகவும் ஆய்வறிஞர்களாகவும் உருவாகுவதைக் கண்டு உள்ளம் உவகை பொங்குகின்றது. அதேவேளையில் பெருந்தொகையான வளர் இளம் மாணவச் செல்வங்கள் வாசிப்புப் பழக்கமற்ற பண்பற்ற ஒரு சமுதாயமாக உருவாகிவருவதை காண்கின்றபோது உள்ளம் சொல்லொணா வேதனையடைகின்றது. பண்பான சமுதாய உருவாக்கத்துக்கு வாசிப்புப் பழக்கம் அவசியமானதாகும். பாடசாலை, பல்கலைக் கழக மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கமானது குறைந்து வருகிறது. தற்பொழுது பாடசாலை மாணவர்கள் பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் தனியார் கல்வி நிறுவனங்களிலும் இலத்திரனியல் சாதனங்களைப் பயன்படுத்துவதிலும் காலத்தைக் கழிப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதனால் நூல்கள் வெறுமனே அலு மாரிகளில் தூங்கிக் கிடக்கின்றன. மாணவர்களில் இருந்து புலமைமிக்க அறிவுலகச் சிற்பிகளை உருவாக்குவதற்கு நூல்கள் முக்கியமாக அமைகின்றன.

### வாசிப்பின் தொன்மை

இலக்கியங்களிலே நூல்களானது புத்தகம், ஏடு, ஒலை, சுவடி, தூக்கு, பனுவல் என்று பல பெயர்களால் அழைக்கப்பட்டு வந்ததைக் காணக் கூடியதாக உள்ளது. பனுவல் என்ற சொல்லானது சொல்லுவது என்ற பொருளை உடையது. சொல்லப்பட்ட கருத்துகளைக்கொண்ட நூல்களும் நாளடைவில் பனுவல் என அழைக்கப்படலாயிற்று. முற்காலத்தில் ஏடுகளில் எழுதி அவற்றில் துளையிட்டு இழையினால் கட்டி வைத்துப் பாதுகாக்கப்பட்டது. கட்டப்பயன்படுத்தப்பட்ட நூலானது கட்டிய தொகுதிக்கே நூல் என அழைக்கும் வழக்கம் உருவாகிவிட்டது. மண்தரையில் நடந்தால் பாதச்சுவடு பதிவதுபோல ஓலையிலே மனிதன் தனது கருத்துச் சுவட்டை பதித்ததால் அதனைச் சுவடி என அழைக்கும் முறைமை ஏற்பட்டது. தூக்கு என்பது செய்யுளைக் குறிக்கப் பயன்பட்டது. நாளடைவில் இந்தச் செய்யுளானது நூலாக உருவாகியபின் நூலைத் தூக்கு என அழைக்கும் வழக்கம் ஏற்பட்டது. 'நூல் எனப்படுவது நுவலும் காலை....' - தொல்காப்பியம்

1422 என்ற வரிகளில் குறிப்பிட்டபடி தொல்காப்பியர் நூலைப்பற்றிக் குறிப்பிடுகையில் ஆரம்பமும் முடிவும் முரண்பாடு இல்லாமல் தொகுத்தும் வகுத்தும் பொருள் விளக்கி நுண்மையுடையதாக நூல் இருக்க வேண்டும் எனக் கூறுகிறார். 'நூலின் இயல்பே ஓர் இரு பாயிரம் தோற்றி மும்மையின் ஒன்றாய்....' - நன்னூல் 4 - பவனந்தியார் நூல் பற்றிக் குறிப்பிடுகையில் நூல் என்பது இரு பாயிரங்கள் கொண்டதாகவும் முதல், வழி, சார்பு என்றவகையில் ஒன்றாகவும், நான்கு பயன்கள் நோக்கியதாகவும், எழு மதம் தழுவியதாகவும், பத்துக் குற்றங்கள் அற்றதாகவும், பத்து அழகுகள் அமைந்ததாகவும், முப்பத்திரண்டு உத்திகள் கொண்டதாகவும் இயல், அதிகாரம், பகுத்து உரையோடு இருக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

மனிதப் பெறுமானங்களை எடுத்துச் செல்லும் உயர் சிந்தனை நூல்களில் காணப்படுகின்றது. நூல்கள் அறிவுத் தேடலில் முனைப்பாக இருப்பவர்களுக்கும், இலக்கிய தாகத்தோடு இருப்பவர்களுக்கும் தீனி போடுகின்றன. அள்ள அள்ளக் குறையாத அரும் பெரும் கருத்துக்கள் அரும்பெரும் செல்வங்கள் நூல்களில் புதைந்து காணப்படுகின்றன. தரமான நூல்கள் காலத்தையும் வென்று நிலைபெறும். நூல்கள் சிந்திக்க வைப்பதோடு விழிப்புணர்வையும் ஏற்படுத்தும். நூலானது அறிவகங்களிலும், வாண்மைத் துறையினர் இல்லங்களிலும், நுண்மான்கள் நுழைபுலம் கொண்ட நிறைமொழி மாந்தர் இல்லங்களிலும் இருப்பதுண்டு.

### வாசிப்பை ஏற்படுத்தல் காலத்தின் தேவையே

வாசிப்பானது எளிய வாசிப்பு, சிக்கலான வாசிப்பு என இருவகைப்படும். வகுப்பு உயர உயர சிக்கலான வாசிப்பு, சிக்கலான கற்றல், சிக்கலான எழுத்துப் பயிற்சிகள் அவசியம். கடினமான நூல்களை வாசித்தல் என்பது சுய எண்ணக் கருவுடன் இணைந்தது. இந்தக் கடினமான புத்தகத்தை என்னால் வாசிக்க முடியும் என்ற எண்ணக்கரு இருந்தால் போதும். அந்தப் புத்தகத்தை வாசித்துக் கிரகிக்க முடியும்.

எனவே புத்தகம் என்பது ஒரு வகைத் தியானத்தின் திறவுகோல். தியானம் செய்யும்போது ஏற்படுவது ஓர் ஆனந்த நிலை. அந்த நிலையை தியானம் செய்து பெறுவதைப் போல நல்ல புத்தகங்களை வாசிப்பதன் மூலமும் பெறமுடியும். புத்தகங்களை ஆழ்ந்து அனுபவித்து பயிலும் அனைவரும் இத்தியான நிலையை பெறுதல் சுலபம். நமது பயணங்களில் உற்ற நண்பனாக, ஓய்வு நேரத்தில் நல்ல தோழனாக இருக்கின்ற புத்தகங்கள் நல்லறிவு பெட்டகங்களாகத் திகழ்கின்றன.

நூல்களின் சிறப்புத் தன்மையை உணர்ந்து ஆற்றுகை வாசிப்பு, வாசிப்புக்கான எழுத்துக்கான, சொற்பொழிவுக்கான பயிற்சிகள் என்பனவற்றைப் பள்ளிக்கூட வகுப்பறைகளில் இருந்து தொடங்க வேண்டும். வாசிப்பினூடாக வாழ்வியல் சமநிலை, ஆளுமை விருத்தி, மாணவர் ஆக்கத்திறன் விருத்தி, மாணவர் தலைமைத்துவம் போன்றவற்றைப் பேணுவதோடு அவர்கள் விஞ்ஞானிகளாக மலர்ச்சிபெற, எழுத்தாளர்களாக மலர்ச்சிபெற புத்தகங்கள் எவ்வாறு பயனுடையதாகிறதென்ற விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதும் அவசியமாகிறது.

**காணி தேவை**

K.K.S. வீதி, பலாலி வீதியை அண்மித்த பகுதியில் காணி தேவை. தரகர் வேண்டாம்.

076 399 6505

(cs 40817) (2.6)

**Chemistry (இரசாயனவியல்)**

விஞ்ஞான பட்டதாரி ஆசிரியரினால் தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலத்தில் தனி Or குழு வகுப்புக்களாக கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 076 778 1442

(CR 5494) (1/6)

**வீட்டு பணிப்பெண் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டில் தங்கியிருந்து வேலைசெய்ய பணிப்பெண் தேவை

077 998 8066

(cs 40818) (2.6)

**விற்பனைக்கு**

பான்சி, புடைவை, பேபி நீட்ஸ், பார்மசி நடத்தக்கூடிய கடை தளபாடங்களுடன் விற்பனைக்கு உண்டு.

(NE 17804)(3.6)

தொடர்பு : 071 527 3971

**English Classes**

Zoom மூலம்

Gr-1 to O/L

அல்லது வீடு வந்து கற்பிக்கப்படும்.

Grammar with syllabus

T.P: 077 3314 608

(CS 17881) 1/6

## இலங்கைக்கு இன்று முக்கியமான ஆட்டம்

டுபாய், ஒக். 30

ரி20 உலகக்கிண்ணத் தொடரில் இன்று முக்கியத்துவம் மிக்க ஆட்டமொன்றில் களமிறங்குகின்றது இலங்கை அணி.

இன்று மாலை இடம்பெறும் ஆட்டத்தில் இலங்கை - தென்னாபிரிக்கா அணிகள் மோதுகின்றன.

முன்னதாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கை அணி ஆஸ்திரேலியாவிடம் தோல்வியடைந்துள்ள நிலையில் இன்றைய ஆட்டம் இலங்கை அணிக்கு முக்கியத்து வம் மிக்கதாகப்பார்க்கப்படுகின்றது. (ம)

ஐ.பி.எல் தொடர்

## 4 வீரர்களை மட்டுமே தக்கவைக்க முடியும்!

### உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில்

புதுடில்லி, ஒக். 30

2022ஆம் ஆண்டு ஐ.பி.எல் தொடருக்காக ஒவ்வொரு அணிகளும் தலா 4 வீரர்களைத் தக்கவைக்க முடியும் என்றும், புதிதாக வந்துள்ள இரு அணிகளும் தலா 3 வீரர்களை ஏலத்துக்கு முன்பாகவே எடுத்துக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான ஐபிஎல் ஏலத்தில் பங்கேற்கும் 10 அணிகளும் வீரர்களுக்காக ஏலத்தில் 90 கோடி ரூபா வரை செலவிடலாம் என வரம்பு உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த ஐபிஎல் தொடரில் ரூ.85 கோடியாக இந்தத் தொகை இருந்தது. ஏலத்துக்கான புதிய விதிமுறைகள் அனைத்தும் இந்த வாரத்துக்குள் இறுதி செய்யப்படும் எனத் தெரிகிறது. இரு விதமான விதிமுறைகள் ஆலோசிக்கப்பட உள்ளன. ஒன்று ஏற்கனவே இருக்கும் 8 அணிகளும் 3 உள்நாட்டு வீரர்களையும், ஒரு வெளிநாட்டு வீரரையும் தக்கவைக்கலாம், அல்லது 2 வெளிநாட்டு வீரர்கள், 2 உள்நாட்டு வீரர்களைத் தக்கவைக்கலாம். புதிதாக வரும் 2 அணிகளும் ஏலத்தில் பங்கேற்கும் முன்பே வீரர்கள் பட்டியலில் 3 வீரர்களைத் தேர்ந்தெடுக்கலாம். கடந்த ஏலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட ஆர்டிஎம் முறை அதாவது மட்ச் கார் முறை இந்த முறை இல்லை எனத் தெரிகிறது. (ம)

**வாகன கண்காணிப்புச் சாதனம் (GPS Tracker) விற்பனைக்கு**



வெறும் 3999/- மட்டுமே செலுத்தி உங்கள் வாகனங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் வாகனத்தின் அமைவிடம் இயங்கும் வேகம் தரித்து நிறுத்தப்பட்ட காலம் கடந்த நாட்களில் வாகனம் சென்ற இடங்கள் மற்றும் தூரம் போன்ற அனைத்தையும் மொபைல் அப்ளிக்கேசன் மூலம் பார்வையிட முடியும். மேலதிக விபரங்களிற்கு அழையுங்கள்.

(CR 35495) (3.6) 076 417 1063

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் மானிப்பாய் சமுர்த்தி வங்கி வீதியில் 11 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நிலப்பரப்பு, 1 3/4, 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்டநிலையில் 14 அடி பாதையுடன் மருதடி விநாயகர் கோவிலில் இருந்து 700M தூரம்.

**பார்வையிடும் நேரம்**

காலை 6 மணி தொடக்கம்
மாலை 6 மணிவரை
தரகர் தேவையில்லை
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.



077 814 7389
077 614 7333

(CS 40825) 1/6



பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.